பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 24 திங்கட்கிழமை (06.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :71

# போர்நிறுத்த உடன்பாடு அமுலாக்கமே சமாதானப் பேச்சுக்கான திறவுகோல்!

## தமிழீழ விடுதலைப் புலிகள் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்ரவரி 6

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே பேச்சு ஆரம்பிக்கப்பட தமிழர் தாயகத்தில் அமைதிச் சூழல் ஏற்படுத்தப்படவேண்டும். இதற்கு போர் நிறுத்த ஒப்பந்தத்தை சரியாக அமுல்படுத்துவதே ஒரே வழியாகும். இன்றைய அரசியல் சூழலில் சமாதானப் பேச்சுக்கான திறவுகோல் போர்நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கமே ஆகும். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின் மார்கழி 2005 - தை 2006 மாதப் பகுதிக்குரிய 128 ஆவது இதழ் நேற்று வெளியானது. இதில் 'சமாதானத்தின் திறவுகோல் போர் நிறுத்த ஒப்பந்தமே' என்ற தலைப்பில் ஆசிரியர் தலையங்கம் வெளியாகியுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

சர்வதேச சமூகத்தை ஏமாற்றவும் - காலத்தை இழுத்தடித்து போருக்குத் தயாராவதையும் இலக்காகக் கொண்டே சிங்கள ஆட்சியாளர்கள் இதுவரை காலமும் பேச்சுகளைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

சிங்கள ஆட்சியாளர்களின் இந்த சந்தர்ப்பவாத அரசியலை புலிகள் இயக்கம் கடந்த நான்கு வருட சமாதான காலத்தில் சர்வதேச சமூகத்திற்கு நிரூபித்துக் காட்டிவிட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்பில் கிளைமோர் மீட்பு!

பண்டத்தரிப்புப் பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆறு கிளைமோர் குண்டுகளைப் படையினர் மீட்டுள்ளனர். இந்தக் கிளைமோர்க் குண்டுகள் ஒவ்வொன்றும் 8 கிலோமுதல் 10 கிலோ வரையிலான எடை உள்ளன எனத் தெரிவித்தார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க.

இதேவேளை, கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கை ஒன்றின் போது 3 கைக்குண்டுகள், ரி. 56 ரகத் துப்பாக்கி மகஸின்கள் 2 மற்றும் 57 தோட்டாக்கள் எனபவற்றை படையினர் மீட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (க-12)

## மீட்கப்பட்ட சடலம் ஈ.பி.டி.பி. உறுப்பினருடையது!

வவுனியா,பெப்.6

வவுனியா கூமாங்குளத்தில் நேற்றுமுன்தினம் பொலீஸாரால் மீட்கப்பட்ட சடலம் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்தவரான மாரிமுத்து மகேந்திரன் என்பவரது என அடையாளம் காணப்பட்டுள்ளதாக வவுனியா பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இரு நாள்களிற்கு முன்னர் காணாமற் போயிருந்த அவர், அடித்துக் கொல்லப்பட்ட நிலையில் கூமாங்குளம் பகுதியில் கொண்டு வந்து போடப்பட்டிருக்கலாம் என தாம் சந்தேகிக்கின்றனர் என வவுனியாப் பொலீஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஒ-12)

## தொகுதிப் பங்கீட்டில் பிணக்கு உடைகிறது ஜே.வி.பி.-சு.க.கூட்டு

கொழும்பு,பெப்.6

தொகுதிப் பங்கீட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஏற்பட்ட பிணக்கால் உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட ஜே.வி.பி. தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை இரு தரப்பினரிடையேயும் இடம்பெற்ற தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சில் ஜே.வி.பியினர் திருப்திப்படக் கூடிய முடிவு எட்டப்படவில்லை என்றும் -

இதனாலேயே ஜே.வி.பியின் உயர்மட்டத்தலைவர்கள் தேர்தலில் தனித்துப்போட்டியிடும் முடிவை எடுத்துள்ளனர் என்றும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜே.வி.பி. தலைவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசினர். இச்சந்திப்பின் போது இம்மாதம் ஜெனீவாவில் விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்தத் திட்டமிட்டுள்ள பேச்சுக் குறித்து விவாதிக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது.

இதன் பின்னர் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ஸ ஆகியோர் சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இணைச் செயலாளரான அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவைச் சந்தித்துப் பேசினர்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அனைத்து வேட்பாளர் பட்டியல்களிலும் மூன்றில் ஒரு பங்கை தமது கட்சியினருக்கு ஒதுக்கவேண்டும் என்று ஜே.வி.பி. தலைவர்கள் அப்போது கோரினர் என்றும் -

ஆனால், அந்தக் கோரிக்கை அடியோடு நிராகரிக்கப்பட்டதாகவும் - கூறப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு இதுவரை 15 அரசியல் கட்சிகள் அறிவிப்பு

கொழும்பு,பெப்.6

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் 15 கட்சிகள் போட்டியிடவுள்ளன. இதுகுறித்து தேர்தல் திணைக்களத்துக்கு அக்கட்சிகள் அறிவித்துள்ளன.

ஐ.தே.கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் , ஜே.வி.பி. உட்பட 15 கட்சிகள் இது குறித்து அறிவித்துள்ளன என்று தேர்தல் ஆணையகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? என்பது பற்றித் தேர்தல் ஆணையாளர் பதிவுசெய்யப்பட்ட 52 கட்சிகளிடம் கடிதம் மூலம் கருத்துக்கேட்டிருந்தார்.

இதேவேளை, 10 சுயேச்சைக் குழுக்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன.

கொழும்பு, அம்பாறை, மாத்தளை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டத் தெரிவித்தாட்சி

(14ஆம் பக்கம் பார்க்க)

## பெப்ரவரி 15 இல் பேச்சு நடக்காது புதிய திகதி விரைவில் தெரியவரும்!

கொழும்பு,பெப்.6

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான ஜெனீவாப் பேச்சுகள் எதிர்வரும் 15,16ஆம் திகதிகளில் நடைபெறும் என இலங்கை அரச தரப்பில் நம்பிக்கையாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் -

அந்தத் திகதிகளில் பேச்சுகள் நடக்கா என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

அத்திகதிகளில் பேச்சுகளை நடத்த முடியாது என்பதைப் புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர் என நம்பகமாக அறியவந்தது.

இந்நிலையில் பேச்சுக்கான புதிய திகதியை உறுதிப்படுத்துதல் மற்றும் ஜெனீவா செல்வதற்கான புலிகள் தரப்பின் ஆயத்தங்கள், போக்குவரத்து ஏற்பாடுகள், அதற்கான செலவின விவகாரங்கள் போன்றவை குறித்துப் பேசுவதற்காக நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் அடுத்துவரும் தினங்களில் கிளிநொச்சி செல்கிறார் எனக் கூறப்படுகின்றது. அங்கு அவர் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து இவ்விடயங்கள் குறித்து விரிவாகப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேசமயம் நோர்வே அனுசரணைக் குழுவின் பொறுப்பாளரும் அந்த நாட்டு அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் ஆபிரிக்க நாடுகளுக்கான

(14ஆம் பக்கம் பார்க்க)

## அட்மிரல் சந்தகிரிக்கு எதிரான ஊழல் விசாரணை ஆரம்பம்

கொழும்பு,பெப்.6

தமது சொத்துடைமைகள் தொடர்பாகத் தாம் வெளியிட்ட பிரகடன ஆவணத்தைச் சட்டவிரோதமாக அப்போது மாற்றி அமைத்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரி அட்மிரல் தயா சந்தகிரிக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டு விசாரணைகளை லஞ்ச, ஊழல் தடுப்பு ஆணைக்குழு ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் கடற்படைத் தளபதியான அட்மிரல் சந்தகிரி தொடர்பாகக் கடற்படைத் தலைமையகத்தில் வைக்கப்பட்டிருந்த ஆவணங்களிலேயே சட்டவிரோதமான முறையில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகிய நிலையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தளபதிகள் போன்ற மூத்த அதிகாரிகளின் சொத்து விவரம் தொடர்பான இந்த ஆவணங்கள் சீல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுத் தொடர்பாக ஜனாதிபதிக்கு உதவ விசேட ஆலோசகர் நியமனம்

கொழும்பு,பெப்.6



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசிற்குமிடையே ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சுகள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிறப்பு ஆலோசகராக ஐக்கிய நாடுகள் சபையின் சட்டப் பிரிவைச் சேர்ந்த பாலித கோஹொண நியமிக்கப்பட்டுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டத்துறையில் இலங்கை பல்கலைக்கழகம், ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் என்பவற்றில் பட்டப்படிப்பை மேற்கொண்ட இவர் சட்டத்துறையில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் இலங்கை அரசிற்குத் தனது நிபுணத் துவம்வாய்ந்த ஆ... என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மேலும் 5 குடும்பங்கள் தமிழகத்தில் தஞ்சம்

ராமேஸ்வரம்,பெப்.6

இலங்கையில் இருந்து மேலும் 18 தமிழ் அகதிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் தஞ்சமடைந்தனர்.

கிளிநொச்சி மற்றும் திருகோணமலை பகுதிகளிலிருந்து 5 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆண்கள் 7 பெண்கள், 5 குழந்தைகள் பேசாலை கடற்கரையில் இருந்து படகில் புறப்பட்டு தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைப் பகுதியை சென்றடைந்தனர். அங்கிருந்து ... சத்திரம் பொலீஸ் சோதனைச் சாவடிக்கு அவர்கள் சென்றனர்.

கடற்பிரிவு பொலீஸாரின் விசாரணைக்குப் பின் தனுஷ்கோடி பொலீஸ் நிலையத்தில் அவர்களை ஒப்படைத்தனர். பின்னர் அவர்கள் அனைவரும் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கடந்த இரு மாதங்களில் நேற்றுடன் தமிழகத்தில் தஞ்சமடைந்த இலங்கை அகதிகளின் எண்ணிக்கை 377 ஆக உயர்ந்துள்ளது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



குடாநாட்டில் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நேரில் கண்டறிய வந்துள்ள தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் இங்குள்ள ஊடகவியலாளர்களை நேற்றுப் பிற்பகல் யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள் : ஆதி)

# மாணவர்களின் நலனுக்காகச் சேவை புரிகின்ற தொண்டராசிரியர்கள் எதிர்காலம் கேள்விக் குறி!

## அமைச்சின் செயலாளருக்கு வன்னிப் பிரதேச சங்கம் மகஜர்

புதுக்குடியிருப்பு,பெப்.6

மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு சேவையாற்றும் தொண்டர் ஆசிரியர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக உள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு வன்னி பிரதேச தொண்டர் ஆசிரியர் சங்கம் அனுப்பியுள்ள மகஜரிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு,கிளிநொச்சி,துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களில் சேவையாற்றி வரும் - நிரந்தர நியமனம் கிடைக்காத - தொண்டராசிரியர்கள் மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நேற்று ஒன்று கூடிக் கலந்துரையாடினர். துணுக்காய் வலயத் தொண்டராசிரியர் சங்கத் தலைவர் சு.சுபநேசன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலைத் தொடர்ந்தே மாகாண அமைச்சின் செயலாளருக்கு மகஜர் அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டதாவது:-

கடந்த வருடம் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தற்பொழுது வழங்கப்பட்டுள்ள நிரந்தர நியமனம் கிடைக்கப் பெறாது பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர்களாகிய நாம் எவ்விதமான அடிப்படை வசதிகளும் அற்ற சூழ்நிலையில் வன்னிப் பெரு நிலப்பரப்பில் மாணவர்களின் எதிர்கால நலனை கருத்திற்கொண்டு வேதனமும் பெறாது தொடர்ச்சியாகச் சேவையாற்றி வருகிறோம்.

இவ்வாறான நிலையில் எமது சேவை மூப்பு, தகுதி என்பவற்றைக் கருத்திற் கொண்டு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு கடந்த வருடமும் நடத்தப்பட்டது. இதன் பிரகாரம் சிறுதொகை ஆசிரியர்களுக்கு மட்டுமே நியமனம் வழங்கப்பட்டது. இத்தெரிவு எத்தகைய முறையில் இடம்பெற்றது என்பது பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர்களாகிய எமக்குப் புரியாத புதிராக உள்ளது.

நாம் 1998ஆம் ஆண்டு தொடக்கம் சேவை அர்ப்பணிப்போடும் கடமை உணர்வுடனும் கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசங்களில் நீண்டகாலம் தொடர் சேவையாற்றி வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் நேர்முகத்தேர்விற்குத் தோற்றியும் எமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கவில்லை.

இது எமது எதிர்காலத்தைப் பாதித்ததுடன் எம்மை விரக்தி அடையவும் வைத்துள்ளது. அத்துடன், இவ்வாறு தொடர்சேவை ஆற்றியதனால் வேறு தொழிற்தகமை பெறும் வாய்ப்பையும் இழக்கவைத்துள்ளது. எனவே, எமது மாணவர்களின் கல்வி நிலையையும் எமது சேவையையும் எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு எமது இந்தமனுவை ஏற்று நிரந்தர நியமனம் பெற ஆவன செய்யுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (ஒ-353)

# இரு இளைஞர்களை காணவில்லை

தென்மராட்சி,பெப்.6

சரசாலையிலிருந்து கடந்த 26ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் புறப்பட்ட இரு இளைஞர்களைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் சந்திரபோஸ் மற்றும் சிவகரன் ஆகிய இரு இளைஞர்களுமே காணாமற்போயுள்ளனர்.

இதுபற்றி சாவகச்சேரி பொலீஸ் நிலையம், யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றிலும் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜுடமும் இளைஞர்களின் பெற்றோர்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# வலி.மேற்கில் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

வலி.மேற்கு,பெப்.6

வலிகாமம் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை காலை 9.30 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் இடம்பெறும். சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார். (ஐ-175)

# புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பு

மட்டக்களப்பு,பெப்.6

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அக்கரைப்பற்று முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் முன்னிலையில் பாவட்டாவில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை செயலகத்தில் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெற்றது.

மூன்றுமாத கால இடைவெளியின் பின்னர் நடைபெற்ற இந்தச் சந்திப்பு சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் நீடித்தது. இதில் இரு தரப்பினராலும் இணைந்து எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கூட்டறிக்கையாக இரு பகுதியினரும் வெளியிடுவதுடன் தமிழ், முஸ்லிம் பகுதிகளில் கோயில் மற்றும் பள்ளிவாசல்களில் ஒலி பெருக்கி மூலம் பொது மக்களுக்கு அறியப்படுத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாதமும் இருசாராரும் சந்தித்து மக்களின் அன்றாட வாழ்க்கை வசதிகள், பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடி இயல்பு வாழ்க்கையை தொடர்ந்து பேணுவது என்றும் -

இரு சமூகங்களிற்குமிடையேயிருந்து குறிப்பிட்ட ஒரு சிலர் முரண்பாட்டாளர்களாகத் தொழிற்படுவதை இனங்கண்டு அவர்களைச் சமூகங்களிலிருந்து புறந்தள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் -

அநாவசிய, நாகரீகமற்ற முகவரியற்ற துண்டுப்பிரசுரங்கள் குறித்து இரு சமூகங்களும் உடனுக்குடன் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும் என்றும் இக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளன. (ஒ-12)

# குடும்ப நண்பர்கள் போன்று நடித்து வயோதிபத் தம்பதியை மயக்கித் திருட்டு

யாழ்ப்பாணம்,பெப்.6

குடும்ப நண்பர்கள் போன்று நடித்த இருவர் வயோதிபத் தம்பதியை ஏமாற்றி மயக்கி நகைகளை அபகரித்துச் சென்றனர்.

சங்கானை ஆஸ்பத்திரியடியில் வசிக்கும் நல்லதம்பி முருகேசு (வயது 70) அவரது மனைவி முருகேசு கமலாதேவி(வயது 65) ஆகிய இருவருமே இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களாவர்.

இத்தம்பதியின் மகனும், மகளும் தலவாக்கொல்லையில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றனர். அவர்களது நண்பர்கள் எனத் தம்மைக் கூறிக்கொண்ட நடுத்தர வயதுடைய இருவர் குறிப்பிட்ட வயோதிபத் தம்பதியின் வீட்டிற்கு வந்துள்ளனர். தலவாக்கொல்லையிலிருந்து தாம் வந்துள்ளனர் என்று கூறிய அவர்கள் வயோதிபத் தம்பதியின் அனுமதியுடன் அவர்களது வீட்டில் அன்றிரவு தங்கியுள்ளனர்.

வயோதிபத் தம்பதியுடன் குடும்பக் கதை பேசிய புதியவர்கள் கோழி இறைச்சி வாங்கி வந்து கறி சமைத்துப் பகிர்ந்துண்டுவிட்டு உறங்கினர் என்று கூறப்படுகிறது.

மறுநாளான நேற்றுக்காலை வயோதிபத் தம்பதியின் வீட்டிலிருந்து முனகல் சத்தம் கேட்டு அயலவர்கள் சென்று பார்த்தனர். அங்கு தம்பதியர் இருவரும் மயக்க நிலையில் காணப்பட்டனர். வயோதிப மாது வழக்கமாக அணிந்திருக்கும் நகைகளும் அப்போது அவரிடம் காணப்படவில்லை.

இதனையடுத்து வயோதிபத் தம்பதியரை அயலவர்கள் சங்கானை மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர் அவர்களிருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதுகுறித்து பொலீஸாரிடம் முறையிட்டதையடுத்து சம்பந்தப்பட்ட வீட்டுக்குச் சென்ற பொலீஸார் வீட்டைப் பூட்டி 'சீல்' வைத்துள்ளனர்.

வயோதிபத் தம்பதியர் வீட்டுக்குத் திரும்பிய பின்னரே அங்கு அபகரிக்கப்பட்ட பிற பொருள்கள் பற்றிய விவரம் வெளிவரும் (ஒ-15-29)

# இலங்கையின் தேசியப் பாதுகாப்பு திருப்தியில்லை என்கிறார் ஆலோசகர்

கொழும்பு,பெப்.6

இலங்கையின் தேசியப் பாதுகாப்பு நிலைமை திருப்திகரமாக இல்லை என்று பகிரங்கமாக விமர்சித்துள்ளார் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராக சமீபத்தில் நியமிக்கப்பட்ட பஹடிய சஞ்சய கொலன்ன.

சர்வதேச கல்விக்கான பண்டாரநாயக்க மையம் மற்றும் அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் வியூகக் கல்விக்கான கிழக்கு-தெற்கு ஆசிய நிலையம் ஆகியவை இணைந்து கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பான இருநாள் மாநாட்டை நடத்தின. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இலங்கை அரசின் பாதுகாப்பு வியூகங்களைக் கடுமையாக விமர்சித்தார்.

பாதுகாப்பு நடவடிக்கைகளில் எதிர்கொள்ளும் இக்கட்டான நிலைமைகளுக்கு முகம் கொடுத்து அவற்றைச் சமாளிக்க வேண்டியதே அரசின் முன்னுள்ள முதற்பணி என்றும் சஞ்சய கொலன்ன அப்போது குறிப்பிட்டார்.

'இலங்கையின் பாதுகாப்புச் சிக்கல்' என்ற தலைப்பிலான ஒரு பக்கப் பிரசுரம் ஒன்றையும் அவர் அங்கு வந்தி[illegible] (ஒ)




# சேமிப்பு வங்கியின் வடக்கு - கிழக்கு வலயம் இம்மாத இறுதி முதல் யாழ்ப்பாணத்தில்

## புதிய வலய முகாமையாளராக சிவானந்தா நியமனம்

யாழ்ப்பாணம்,பெப்.6



ம.சிவானந்தா

தேசிய சேமிப்பு வங்கியின் வடக்கு - கிழக்கு வலய அலுவலகம் யாழ்ப்பாணத்தில் இயங்க உள்ளது.

இதுவரை காலமும் கொழும்பில் இயங்கி வந்த வலய அலுவலகத்தை இந்த மாத இறுதியில் தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் 2 ஆவது மாடியில் இயக்குவதற்கு வங்கியின் வடக்கு - கிழக்கு உதவிப் பொதுமுகாமையாளர் இ.ஈஸ்வரலிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கிடையில் - வங்கியின் வடக்கு -கிழக்கு வலய அலுவலகத்தின் புதிய வலய முகாமையாளராக மயில்வாகனம் சிவானந்தா (சிரேஷ்ட முகாமையளர் தரம் 1) இன்று திங்கட்கிழமை தொடக்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 30 வருட காலமாக வங்கிச் சேவையுடன் தன்னை இணைத்துக்கொண்ட இவர், தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் முகாமையாளராகப் பணியாற்றி வந்ததுடன் வாடிக்கையாளர் மத்தியில் நம்பிக்கைக்கு உரியவராகவும் மதிக்கப்படுபவர்.

வங்கியின் வடக்கு - கிழக்கு வலய அலுவலகம் திறந்துவைக்கப்படுவதை அடுத்து, வீடமைப்புக் கடன், சுயதேவைக் கடன் தொடர்பில் வாடிக்கையாளர்கள் இதுவரை காலமும் நோக்கிய காலதாமதம் தவிர்க்கப்படுவதுடன், வாடிக்கையாளர்களது பிரச்சினைகளை வலய முகாமையாளருக்குத் தெரியப்படுத்தி உடனடித் தீர்வைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் -

[illegible]களை நெறிப்படுத்தல், வங்கிகள் எதிர்கொள்ளும் ஊழியர்கள் சார் பிரச்[illegible]இலகுவாக - விரைவாகத் தீர்த்து வைக்கக்கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# புறச்சூழல் சரியாக இருந்தால்தான் பேச்சு நடப்பது சாத்தியமாகும்

இலங்கை சமாதான நடவடிக்கைகள் தொடர்பான அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது சம்பந்தப்பட்ட விடயம் சிக்கலுக்கு உள்ளாகியிருக்கின்றது.

வெலிக்கந்தை இராணுவத் தடை நிலைக்குப் பக்கத்தில் வைத்து ஒட்டுப் படையினர் எனக் கருதப்படுவோரால் கடத்திச் செல்லப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக சமூக சேவையாளர்கள் ஏழு பேரினதும் கதி ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அதனால், அதுபோல, ஜெனீவாப் பேச்சுகள் நடைபெறுமா என்பதும் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

ஜெனீவாப் பேச்சுக்கான இணக்கம் கடந்த 25ஆம் திகதி கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரகாரனுக்கும் நோர்வே அனுசரணைத் தரப்பின் பிரதிநிதிகளான அந்நாட்டு அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது எட்டப்பட்டது. அச்சமயமே சமாதானப் பேச்சு நடைபெறுவதானால் அதற்கான புறச்சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை விடுதலைப் புலிகளின் சார்பில் அதன் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தெட்டத் தெளிவாகத் தெளிவுபடுத்தியிருந்தார்.

மோதல்கள், யுத்தங்கள், இராணுவக் கெடுபிடிகள் போன்றவையற்ற - ஓர் இயல்பு நிலையிலேயே - எந்த அமைதிப் பேச்சுகளும் நடைபெற வேண்டும், நடைபெற முடியும் என்பது புலிகளின் தீர்க்கமான நிலைப்பாடு. இன்று, நேற்றல்ல, தங்களது முப்பது வருடகால - நீண்ட விடுதலைப் போராட்ட வரலாற்றில் இத்தகைய ஒரு பிடிவாதமான -நியாயமான - நிலையை அவர்கள் கைக்கொண்டு, வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள் என்பதை இந்த இனப்பிரச்சினை வரலாற்றைப் படிக்கும் ஒவ்வொரு அவதானியும் இலகுவாகக் காணமுடியும்.

இதையே இப்போதைய பேச்சு முயற்சிகளின் போதும் விடுதலைப் புலிகள் கையாள்கிறார்கள்.

கடந்த 25ஆம் திகதி நோர்வே அமைச்சர் சொல்ஹெய் உடனான பேச்சுகளின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதை மிகத் தெளிவாக உரைத்திருந்தார் பாலசிங்கம்.

*“பேச்சுக்கு வர நாங்கள் தயாராக இருக்கிறோம். விரைவில் பேச்சுகளில் பங்குபற்றவும் தயாராக இருக்கிறோம். ஆனால், உடனடியாக வன்முறைகள் - அதாவது அப்பாவித் தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்படுகின்ற அரச பயங்கரவாத வன்முறைகள் - நிறுத்தப்பட வேண்டும். சுமுகமான - நல்லெண்ண - புறச்சூழல் நிலை உருவாக்கப்பட வேண்டும். இதையே தலைவர் பிரபாகரன் திரும்பத் திரும்ப வலியுறுத்தி எடுத்துரைத்திருக்கின்றார். இந்தப் புறநிலையை ஏற்படுத்துவது அரசின் கைகளில்தான் இருக்கின்றது. முன்பும் இப்படிப் பல பேச்சுகள் நடந்தன. பல பேச்சுகள் இடையிலேயே முறிந்து போனமைக்குக் காரணம் அரசுப் படைகள் அப்பாவித் தமிழ் மக்கள் மீது நடத்திய தாக்குதல்கள்தான். இந்தத் தாக்குதல்களினால்தான் திம்புவில் இருந்து கடைசிப் பேச்சுகள் வரை பல முறிந்து போயின.”* - என்றார் மதியுரைஞர் பாலசிங்கம்.

அந்த வகையில் ஜெனீவாப் பேச்சும் வெறும் முன் அறிவிப்போடு - நடைபெறாமலேயே - முடிந்து போகும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

ஜெனீவாப் பேச்சுக்கான புறச்சூழலை ஏற்படுத்தும் தமது கடப்பாட்டை நிறைவு செய்வதற்காக அரசுப் படைகளுக்கு எதிரான சகல வன்முறை நடவடிக்கைகளையும் புலிகள் நிறுத்துகின்றார்கள் என அந்தச் செய்தியாளர் மாநாட்டில் வைத்து பாலசிங்கம் அறிவித்தார்.

இது தொடர்பாகத் தலைவர் பிரபாகரன் விடுத்த உத்தரவு முழு அளவில் - அட்சரம் பிசகாமல் - நடைமுறைப் படுத்தப்படுகின்றது. அந்த அறிவிப்பு விடுக்கப்பட்டு சுமார் இரண்டு வாரங்களாகின்றன. இந்தப் பத்தி எழுதப்படும் இந்நேரம் வரை அந்த உத்தரவைச் செயற்படுத்துவதில் புலிகள் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். நிலைமையைக் குழப்புவதற்கு வழிசெய்யும் விதத்தில் ஒரு கல்லைக் கூட அவர்கள் நகர்த்தவில்லை என்பதை அரசுத் தரப்பே ஒப்புக்கொள்ளும்.

இந்நிலையில் தமிழர் தரப்பில் - பாதிக்கப்பட்ட மக்களுக்கான தொண்டு நிறுவனப் பணியில் ஈடுபட்டிருந்த - சமூக சேவையாளர்கள் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வைத்து ஒட்டுப்படைகளால் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்படுவதும், அதற்கும் தமக்கும் சம்பந்தமேயில்லை என்று அரசுப் படைகளும் தலைமையும் கைவிரிப்பதும் எத்தகைய விளைவுகளையும், நிலைவரத்தையும் உண்டாக்கும் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

சமூக சேவையாளர்களைக் கடத்திய ஒட்டுப்படைகளுக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்று அரசு உறுதியாகக் கூறுமானால், அந்த ஒட்டுப்படைகளைத் தாங்களே நேரடியாகக் கையாள வேண்டிய நிலைக்குத் தமிழர் தரப்புத் தள்ளப்படும்.

ஒட்டுப்படைகளுக்கு எதிரான நடவடிக்கை மீள ஆரம்பம் என யாழ். குடாநாட்டில் ‘பொங்கி எழும் மக்கள் படை’யின் பெயரால் வெளியாகியிருக்கும் அறிவிப்பை இந்தப் பின்னணியிலேயே நாம் கவனிக்க வேண்டியிருக்கின்றது.

தனது புலனாய்வுப் பிரிவுகளின் ஆசீர்வாதத்துடன் இயங்கும் ஒட்டுப்படைகளைக் கட்டுப்படுத்தி, அடக்கி வைக்க அரசுத் தலைமையால் முடியாவிட்டால் அந்த ஒட்டுப் படைகளைத் தாமே தட்டிக் கேட்கவேண்டிய நிலைமை தமிழர் தரப்புக்கு ஏற்படும்.

அப்படி ஒரு நிலைமை உருவானால் பேச்சுக்கான புறச் சூழ்நிலை குழம்பும்; விபரீதங்கள் ஏற்படும். பெரிய யுத்தத்தை நோக்கி அந்த நகர்வுகள் வழிகாட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அப்படி விபரீதம் நேராமல் பார்த்துக்கொள்வது அரசின் கடமை. அதற்கு இன்னமும் காலம் தாழ்ந்துவிடவில்லை என்பதுதான் உண்மை.

# சோதனை என்ற பாணியில் இரவுக் கொள்ளை! ஏழாலையில் பெருந்தொகை நகைகள் சூறை!!

## ஆயுதபாணிகளின் அட்டகாசத்தால் மக்கள் பெரும் பீதி

ஏழாலை,பெப்.6

வீட்டைச் சோதனையிடப் போவதாகக் கூறிக்கொண்டு இரவு நேரம் புகுந்த ஆயுத பாணிகளான கும்பல் ஒன்று ஏழாலை தெற்குப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இருந்தோரைப் பயமுறுத்தி பெருந்தொகையான தங்க நகைகளைச் சூறையாடிச் சென்றிருக்கின்றது.

புன்னாலைக்கட்டுவன்- மல்லாகம் வீதியில் ஏழாலை மாதர் சங்கத்துக்கு அருகிலுள்ள ஒரு வீட்டிலேயே நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு இந்தக் கொள்ளை நடந்திருக்கிறது.

வீட்டில் இருந்த மூன்று பெண்களுக்குச் சொந்தமான சுமார் 50 பவுண் தங்க நகைகள், பத்தாயிரம் ரூபா பணம், கைத்தொலைபேசி, வீடியோ டெக், தொலைக்காட்சி என்பனவே கொள்ளையிடப்பட்டிருக்கின்றன. வீட்டில் நின்ற எம்.டி-90 ரக மோட்டார் சைக்கிள் ஒன்றையும் எடுத்துச் சென்ற கொள்ளையர்கள் பின்னர் அதனை வீட்டின் அருகே கைவிட்டிருந்தனர். வீடியோ, டெக், தொலைக்காட்சி என்பனவும் அவ்விடத்தில் சேதப்படுத்தப்பட்ட நிலையில் கிடந்தன.

இரவு பத்து மணியளவில் வீட்டினுள் புகுந்த கொள்ளையர்கள் துப்பாக்கி, வாள், கோடரி போன்ற ஆயுதங்களை வைத்திருந்தனர் என்று கூறப்படுகிறது. வீட்டில் இருந்தவர்களைத் துப்பாக்கி முனையில் மிரட்டி அறை ஒன்றினுள் அடைத்துவிட்டு கொள்ளையர்கள் பொருள்களைச் சூறையாடியுள்ளனர். வீட்டில் தங்கியிருந்த ஒருவர் கூக்குரல் இட்டபோது கொள்ளையர்கள் வாளினால் அவருக்கு சிறு காயத்தை ஏற்படுத்தி மிரட்டி அடக்கியுள்ளனர்.

நள்ளிரவு 12 மணி தாண்டும் வரை வீட்டிலேயே கொள்ளையர்கள் தங்கி நின்றுள்ளனர். வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த 'ஹயஎஸ்' ரக வான் ஒன்று கொள்ளையர்களால் அடித்து நொறுக்கப்பட்டது.

தாலிக்கொடி, சங்கிலிகள், தோடுகள், காப்புகள், மோதிரங்கள் உட்பட 50 பவுண் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டிருக்கின்றன.

பொருள்களைப் பறி கொடுத்தவர்கள் வசாவிளானைச் சொந்த இடமாகக் கொண்டவர்கள். இடம்பெயர்ந்து கடந்த ஒரு வருட காலமாக ஏழாலையில் வசித்து வந்தனர்.

இந்த நள்ளிரவுக் கொள்ளைச் சம்பவம் ஏழாலைப் பகுதியில் பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-45)

# ஓய்வுபெற்ற அமெரிக்க இராணுவ அதிகாரி இலங்கை இராணுவத் தலைவர்களுடன் சந்திப்பு

## இருதரப்பு விடயங்கள் பற்றி ஆலோசனை

கொழும்பு,பெப்.6

இலங்கை வந்திருக்கும் ஓய்வு பெற்ற அமெரிக்க இராணுவ அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் ஈ.பி.சிமித் இலங்கை பாதுகாப்புத்துறை பிரதம அதிகாரி அட்மிரல் தயா சந்தகிரியை அவரது கூட்டு நடவடிக்கைத் தலைமை அலுவலகத்தில் கடந்த வியாழனன்று சந்தித்து உரையாடினார்.

லெப்டினன்ட் ஜெனரல் ஈ.பி.சிமித் இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருந்தார். இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவையும் கடந்த வெள்ளிக்கிழமை அவர் சந்தித்து உரையாடினார்.

இராணுவத் தலைமையகத்தில் உயர் இராணுவ அதிகாரிகளால் வரவேற்கப்பட்டதையடுத்து லெப்டினன்ட் ஜெனரல் சிமித் இராணுவத் தளபதியின் அலுவலகத்தில் இலங்கை இராணுவத் தளபதியுடன் உரையாடினார். இரு அதி



காரிகளும் இருதரப்புக்கும் அக்கறையுற்ற விடயங்கள் பற்றி ஆராய்ந்ததாக அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் சிமித், ஹவாய் ஹொனலுலுவிலுள்ள பாதுகாப்பு ஆய்வுகளுக்கான ஆஸியா- பசுபிக் மையத்தின் தலைவராகப் பணியாற்றுகின்றார். (ப)

### உள்ளூராட்சி சபைத் தேர்தலில்

# வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் புதிய ஜனநாயகக் கட்சி போட்டியிடும்

கொழும்பு,பெப்.6

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களின்போது, வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களில் போட்டியிடுவது என்று புதிய ஜனநாயகக் கட்சி தீர்மானித்துள்ளது.

இது விடயமாக, மேற்படி கட்சியின் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா விடுத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில்:-

நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் வடக்கு - கிழக்கு தவிர்ந்த மலையகம் உட்பட ஏனைய இடங்களில் புதிய ஜனநாயகக் கட்சி சுயேட்சையாகப் போட்டியிடும்.

மேலும் பிற்போக்கு அரசியலுக்குத் துணைபோகும் தேர்தலை மட்டும் அடிப்படையாகக் கொண்ட சந்தர்ப்பவாத தேர்தல் கூட்டுகளை புதிய ஜனநாயகக் கட்சி நிராகரிப்பதுடன், மாற்று அரசியலை கட்டிவளர்ப்பதற்காக மக்களை ஐக்கியப்படுத்தி சுயேட்சையாகப் போட்டியிடவுள்ளது.

பிற்போக்குச் சக்திகளை அரங்கிற்கு கொண்டுவருவதற்கான பழையவர்களுக்கு பதிலாக கூட்டணி என்று கூறிக் கொண்டு புதிதாக மேலும் பல பிற்போக்கு சக்திகளை அரங்கிற்கு கொண்டு வருவதற்கான தேர்தல் கூட்டுகளால் மலையகத்திற்கு விமோசனம் ஏற்படப் போவதில்லை.

மாறாக, நேர்மையாக மக்களை ஐக்கியப்படுத்தும் பொதுவேலைத் திட்டத்தின் அடிப்படையிலான மாற்று அரசியல் செயற்பாடுகளே மலையக மக்களின் விடுதலைக்கு வழிகாட்டும்.

அந்த அடிப்படையிலேயே புதிய ஜனநாயகக் கட்சி நேர்மையான மக்கள் பிரதிநிதிகளை ஐக்கியப்படுத்தி சுயேட்சையாகப் போட்டியிடவுள்ளது.

வடக்கு - கிழக்கில் தொடரும் அமைதியீனம், ஜனநாயக மறுப்புச் சூழல் போன்றன காரணமாக கட்சி அங்கு போட்டியிடமாட்டாது - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

**நாளை**
தை 25
செவ்வாய்க்கிழமை
07.02.2006
திதி: தசமி
பின்னிரவு: 04.43
நட்சத்திரம் : ரோகிணி
பின்னிரவு: 01.28 வரை
சுபநேரம் : 11.05-12.35
ராகுகாலம் : 03.35 - 05.05
[illegible]

# கீரிமலை நகுலேஸ்வரம் திருவிழா 13ஆம் திகதி திங்களன்று ஆரம்பம்

## தினமும் மாணவர்களின் பக்தி நிகழ்ச்சிகள்

வலி.வடக்கு,பெப்.6

சரித்திரப்பிரசித்திபெற்ற கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 27ஆம் திகதிவரை இடம்பெறவுள்ள திருவிழாவில் தினமும் விசேட ஹோமத்துடன் அபிஷேக பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

மகா சிவராத்திரியன்று நான்கு சாமமும் விசேட அபிஷேகமும், பக்தி பூர்வமாக நிகழ்வுகளும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருவிழாக் காலத்தில் தினமும் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனை, நற்சிந்தனை, கதாப்பிரசங்கம், வில்லிசை முதலான பக்தி நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழிபாடுகளில் கலந்துகொள்ள விரும்பும் பாடசாலைகளைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (எ-86)

**உதயவாக்கு**
சந்தேகம் என்பது அவநம்பிக்கையின் சகோதரன் ஆவான்.
- ஓர் அறிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




04.02.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

01 32 44 45 01

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 300880020 இலிருந்து 300892559

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 1,36,81,150/- வெல்லப்படவில்லை

| வெற்றி வாய்ப்புகள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,36,81,150/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 17 | 5,000/- | 85,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 338 | 1,000/- | 3,38,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,036 | 500/- | 5,18,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 15,914 | 40/- | 6,36,560/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 15,215 | 20/- | 3,04,300/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,26,801 | 10/- | 22,68,010/- |
| மொத்தம் | | | 51,49,870/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், சைக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 2,59,327 | | 56,49,870/- |

[illegible]

இந்த புதன்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 1,42,87,200/-

[illegible]

| | |
|---|---|
| இரத்தினபுரி | 300888283-0-11 |
| களுத்துறை | 300888934-7-83 |
| திருகோணமலை | 300883410-9-69 |
| பொலன்னறுவை | 300882500-4-73 |
| புத்தளம் | 300890382-0-31 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03


# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்



## கிருஷ்ணன் விமலேஸ்வரன்

(யாழ். மத்திய கல்லூரியின் இரவுக் காவலாளி)

செல்வம் என்று செல்லமாய்
அழைத்தோம் - ஆனால்
ஏழையாய் வாழ்ந்து ஏதிலியான
எங்கள் தோழா!
நீதிக்குத் தண்டனை நியாயத்துக்குச் சாவு
நிலைமாறிப் போன எங்கள் வாழ்வு
காலம் மாறலாம் கடலும் வற்றலாம்
கண்ணீரருவியோ கடைசிவரை மாறாது.

யா/ மத்திய கல்லூரியின் கல்விசாரா ஊழியர்கள். (46386)

# மரண அறிவித்தல்கள்



## திருமதி ஐயாத்துரை தங்கம்மா

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை தங்கம்மா நேற்று (05.02.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் வீரகத்தி ஐயாத்துரையின் அன்பு மனைவியும் கமலேஸ்வரி, புவனேஸ்வரி, இராசரத்தினம், செல்வராசா இராசமலர், ரவீந்திரன், குகதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமானந்தசிவம், நடராசா, பராசக்தி, நிர்மலாதேவி, மகேந்திரம், நளினி, கோமதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6.02.2006) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப.11 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கோட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.*

தகவல்:
ஐ.ரவிந்திரன் *(மகன்)*
(46462)(26.11.45) செந்தூரன் பந்தல் உரிமையாளர்.

## செல்லையா வள்ளிப்பிள்ளை

கரவெட்டி கிழக்கு, யார்க்கருவை பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா வள்ளிப்பிள்ளை 05-02-2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையாவின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும் தங்கராணி, இந்திராணி,கோகுலராணி (ஆசிரியர் வட்டக்கச்சி ம.வி.), லோகநாதன், இராமநாதன் (ஆசிரியர் தொண்டைமானாறு வீரகத்தி, ம.வி., புலோலி மெ.மி.த.க. பாடசாலை), மணிநாதன் (வட்டக்கச்சி ப.நோ.கூ.சங்கம்), மோகநாதன் (உதவிக் கல்விப்பணிப்பாளர், மன்னார்), பாலநாதன் (தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, கிளிநொச்சி), பாலராணி (ஆசிரியர், புங்குடுதீவு சிறிகணேசா ம.வி.), தேவநாதன் (NGO), தேவராணி (ஆசிரியர், இராமநாதன் ம.வி.) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற ஆறுமுகம், குணரத்தினம் (R.D.A), தர்மராசா, அருட்செல்வி, வசந்தகுமாரி (திட்டமிடல் உதவியாளர், ஆளுநர் காரியாலயம், கிளிநொச்சி), இராஜகுமாரி (ஆசிரியர், இராமநாதபுரம் மேற்கு, அ.த.க.பாடசாலை), சரஸ்வதி (உதவி மாவட்ட செயலர், மன்னார்), கமலராணி (தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, வவுனியா), சிறிதரன் (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06-02-2006) திங்கட்கிழமை மாலை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்து மயானத்துக்கு கொண்டு செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

272,சில்வா வீதி,
வட்டக்கச்சி.

தகவல்:
(46471)(26.11.45) இராமநாதன் (மகன்).


**படிவம்**

குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிப் போட்டிப் பரீட்சைக்குப் பட்டதாரிகள் விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.
முடிவு திகதி: 03.03.2006
BHARATHY
PATHIPPAKAM
430, K.K.S. Road, JAFFNA.


## விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி,பெப்.6

மேய்ச்சலுக்காக வீதியோரத்தில் கட்டப்பட்டிருந்த மாடு வீதியின் நடுவே வந்த போது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அதனுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளோட்டி காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் முகமாலையில் இடம் பெற்றது.

யாழ்.சங்கிலியன் வீதியைச் சேர்ந்த கிருஷ்ணசாமி பாஸ்கரன் (வயது-46) என்பவரே தோள் எழும்பு முறிந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடம் மாற்றப்பட்டுள்ளார். (எ-117)

## குருபூசை

கைதடி,பெப்.6

சுவாமி சச்சியானந்த செல்லம்மா மாதாஜியின் மகா குருபூசை தினம் இன்று திங்கட்கிழமை காலை கைதடி வடக்கிலுள்ள ஸ்ரீசச்சியானந்த ஆச்சிரம மடத்தில் நடைபெறவுள்ளது. (எ-75)

## பற்பசை வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.6

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட 57 முன்பள்ளிகளில் கற்கும் மாணவர்களின் பற்சுகாதாரத்தைப் பேண பற்பசை, தூரிகை வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு மானிப்பாய் சுகாதார அதிகாரி பணிமனையின் சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வி.வர்ண நாதன் மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளரைக் கேட்டுள்ளார்.

மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட முன்பள்ளிகளில் கற்கும் மாணவர்களில் 90 வீத மானவர்களின் பற்களில் பற்சூத்தை நிலவுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்றும்-

எனவே, முன்பள்ளிச் சிறார்கள் மத்தியில் பற்தூரிகை பாவிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க முதற்கட்டமாக பற்தூரிகையும், பற்பசையும் வழங்கியுதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்- என்று சுகாதாரப் பரிசோதகர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (எ-185)

# இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை
# கேள்வி கோரல்கள்

சிறிய அளவிலான உட்கட்டுமானப் புனரமைப்புக்கும்
தரமுயர்த்தலுக்குமான திட்டத்தின் (SIRUP) கீழ் உள்ள வேலைகள்
சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் (JBIC) நிதி வழங்கல்கள்
உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

முருங்கன் சிலாவத்துறை வீதியின் (0 + 000 -15 + 290 km) பகுதியை முன்னேற்றம் செய்தல்.
யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியின் 0 + 000 - 3 + 000 km). பகுதியை புனர் நிர்மாணம் செய்தல்.
யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியின் 3 + 000 - 8 + 000 km). பகுதியை புனர் நிர்மாணம் செய்தல்.
புத்தூர் மீசாலை வீதியின் 0+000-7+000 km). பகுதியை புனர் நிர்மாணம் செய்தல்.
புத்தூர் மீசாலை வீதியின் 7+ 000 -13 + 680 km). பகுதியை புனர் நிர்மாணம் செய்தல்

01 கீழே குறிப்பிடப்பட்ட திட்டங்களிற்கான மூடிய கேள்விகோரல்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கேள்விச்சபையின் சார்பாக பொது முகாமையாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெற்றுக்கொள்வார்.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 27-02-2006 அன்று பிற்பகல் 2 மணியுடன் முடிவடையும்.

கேள்விப்பத்திரங்கள் மாகாணப் பணிப்பாளர்/ வ-கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா அலுவலகத்தில் கிடைக்கும் படிவங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வேலைத்திட்டத்திற்குமான கேள்விப்பத்திர ஆவணங்கள் 06-02-2006 தொடக்கம் 24-02-2006 வரை மீள் அளிக்கமுடியாத கேள்வித் தொகையான 1,725.00 (பெறுமதி சேர்வரி உள்ளடங்கலாக) செலுத்திப் பெறவேண்டும்.

| தொடர் இல | வேலை விவரம் | தகுதிப் பிரமாணம் | பாதுகாப்புப்பத்திர பணத்தொகை.(ரூபா) |
|---|---|---|---|
| 01 | முருங்கன் சிலாவத்துறை, வீதியின் (0+000-15+290 km) பகுதியை முன்னேற்றம் செய்தல். | தற்போது செல்லுபடியாகும் ICTAD தரம் எம் 3 அல்லது அதற்கு மேல். செல்லுபடியாகும் NCASL உறுப்புரிமை. | 1,000,000.00 |
| 02 | யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியின் (0+000-3+000 km) பகுதியை புனர் நிர்மாணம் செய்தல். | தற்போது செல்லுபடியாகும் ICTAD தரம் எம் 5 அல்லது அதற்கு மேல். செல்லுபடியாகும்.NCASL உறுப்புரிமை. | 350,000.00 |
| 03 | யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியின் (3+000-8+000 km) பகுதியை புனர்நிர்மாணம் செய்தல். | தற்போது செல்லுபடியாகும் ICTAD தரம் எம் 4அல்லது அதற்கு மேல். செல்லுபடியாகும். NCASL உறுப்புரிமை. | 600,000.00 |
| 04 | புத்தூர் மீசாலை வீதியின் (0+000- 7+000 km) பகுதியை புனர் நிர்மாணம் செய்தல். | தற்போது செல்லுபடியாகும் ICTAD தரம் எம் 4 அல்லது அதற்கு மேல் செல்லுபடியாகும் NCASL உறுப்புரிமை. | 600,000.00 |
| 05 | புத்தூர் மீசாலை வீதியின் (7+000-13+680km) பகுதியை புனர் நிர்மாணம் செய்தல். | தற்போது செல்லுபடியாகும் ICTAD தரம் எம் 4 அல்லது அதற்கு மேல் செல்லுபடியாகும் NCASL உறுப்புரிமை. | 600,000.00 |

02. நிறைவேற்றும் நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகார சபையாகும்.

03. தகுதிவாய்ந்த கேள்விகோரல்களை கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களிற்கு இணங்குதல் வேண்டும்.

அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ராட் ICTAD நிறுவனத்தில் வீதி நிர்மாணத்துறையியல் பொருத்தமான மேலே குறிப்பிடப்பட்ட தரங்களிற்கேற்ப பதிவு செய்திருத்தல் வேண்டும்.

ஆ) கேள்விகோரல் கோருபவர் இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் NCASL செல்லுபடியாகும். ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக்கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும்.

04. கேள்விகோரல் ஆவணங்களை மாகாணப் பணிப்பாளர் வ-கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம்/வவுனியா அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிடலாம்.

05. கேள்விப் பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவுறும் திகதியிலிருந்து 120 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாகும்.

06. கேள்விப் பாதுகாப்பு பணத்தொகைகளிற்குரிய பத்திரங்கள் மேலே குறிப்பிடப்பட்ட படி கேள்விப்பத்திர ஆவணங்களுடன் இணைந்திருத்தல் வேண்டும் செல்லுபடியாகக்கூடிய பாதுகாப்பு பணப்பத்திரங்களை கொண்டிராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07. முன் கேள்வி கோரல் கூட்டம் 20-02-2006 அன்று காலை 10 மணிக்கு மாகாணப் பணிப்பாளர் வ-கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா அலுவலகத்தில் நடைபெறும்.

08. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்களின் இரு பிரதிகள் *பொது முகாமையாளர், அபிவிருத்தி அதிகாரசபை முதலாவதுமாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல* அலுவலகத்திற்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ முடிவுறும் நேரத்திற்கு முன்பாக சேர்ப்பிக்கப்படவேண்டும்.

09. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின்பு உடனடியாக பொதுமுகாமையாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை முதலாவது மாடி செதிறிபாய பத்தரமுல்ல அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும். கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

10. மேலதிக விவரங்களிற்குத் தயவு செய்து மாகாணப்பணிப்பாளர் / வடக்கு /கிழக்கு (வடக்கு) மாகாணம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் 024 222 2826 அல்லது 021 222 2517 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**R.W.R. பேமசிறி,**
பொது முகாமையாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை. (சி/47721)(26.11.45)

**மோசஸ் மரியதாசன்**
மாகாணப்பணிப்பாளர்/வ-கி(வடக்கு)
வீதி, அபிவிருத்தி அதிகாரசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது நிதி நிறுவனம் 65 வருட கால நிதிச் சேவை அனுபவம்**

The Finance Co Ltd
TFC
ESTD-1940
YOUR SUCCESS IS OUR GOAL

# த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்

## முதலாவது கிளை யாழ். மண்ணில் ஆரம்பித்து 30 ஆவது ஆண்டு நிறைவினை பூர்த்தி செய்யும் வேளையில்.....

நாட்டின் போர்க்கால சூழலிலும் எமது நிறுவனம் தொடர்ச்சியாக சேவைகளை முடக்காத சிறப்பாக இயங்குவதற்கும்,எமது சேவையை நிறைவாக வழங்குவதற்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கிய அனைத்து வாடிக்கையாளப் பெருமக்களுக்கும் எமது முதற்கண் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1976 ஆம் ஆண்டிலிருந்து பெரும் சேவையாற்றி வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற எமது நிறுவனமானது யுத்த காலங்களில் தனது வர்த்தக நடவடிக்கைகளை மட்டுப்படுத்தியபோதிலும், வாடிக்கையாளர்களுக்குரிய சேவையை இடை நிறுத்தாமல் மேற்கொண்டு வந்தது.

2002 இல் மீண்டும் புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் தனது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்த **த பினான்ஸ் கம்பனி** யாழ். கிளையானது இன்று மிகச் சிறப்புடன் இயங்கி வருவதில் நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

எமது யாழ். கிளையானது தனது வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரிக்கும்
முகமாக கடந்த ஆண்டில் கொழும்பில்... வெள்ளவத்தையிலும்
வடமராட்சியில்... நெல்லியடியிலும், தென்மராட்சியில்... சாவகச்சேரியிலும்
வர்த்தக சேவை நிலையங்களை ஆரம்பித்து வைத்திருக்கின்றது.

30ஆவது ஆண்டு நிறைவில் நாம் எமது வாடிக்கையாளர்களுக்கு பல சலுகைகளை வழங்குகின்றோம்.

- உங்கள் நிலையான மற்றும் சேமிப்பு வைப்புகளுக்கு * 'கவர்ச்சிகரமான உயர் வட்டி' *
- முதியோருக்கான சலுகை முறையிலான * 'சிறப்பு வட்டி வீதம்' *
- ஒவ்வொரு சிறுவர் சேமிப்பு வைப்புகளுக்கும் * 'பரிசுப் பொருள்கள்' *

**சுபீட்சத்தை நோக்கி முன்னேறுவதில் உங்களுடன் 'த பினான்ஸ் கம்பனி' தனது கரங்களை இணைத்துக் கொள்கின்றது. தீர்க்கதரிசனமுள்ள எமது நிறுவனத்தின் தலைவர் தேசமான்ய டாக்டர் லலித் கொத்தலாவல அவர் களால் வழி நடத்தப்படும் நாம் இலாபத்தை மட்டும் நோக்காகக்கொள்ளாது உதவியற்றவர்களுக்கான சேவையையும் வழங்கி வருகின்றோம்.**

**பெருமைமிக்க கடந்த காலம்**
**ஒளிமயம்மிக்க நிகழ்காலம் , திட்டமிட்ட எதிர்காலம்**

### வட- கிழக்குப் பிராந்திய இயக்குநரின் ஆசிச்செய்தி......

இன்று யாழ். கிளையினைத் திறந்து 30 ஆண்டுகள் பூர்த்தியடைகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் அதன் வளர்ச்சியுடன் தொடர்பு கொண்டிருந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். யாழ். பினான்ஸ் கம்பனியானது எமது நிறுவனத்தின் முதலாவது கிளையாகும். இதுவே எமது முதன்மைக்கிளையாகவும் பல காலம் விளங்கியது. எல்லாச் சூழ்நிலைகளிலும் வாடிக்கையாளர்களுக்கு அயராது சேவையாற்றி தற்போது மீண்டும் புதுப்பொலிவுடன் வெள்ளவத்தை, நெல்லியடி, சாவகச்சேரியில் உபகிளைகளை ஸ்தாபித்து தலைநிமிர்ந்து நிற்கின்றது. இதன் பின்னணியிலிருந்து இயக்கும் தலைவர் **தேசமான்ய டாக்டர் லலித் கொத்தலாவல** அவர்கள் சார்பிலும், இயக்குநர் சபை சார்பிலும் யாழ். கிளையில் பணிபுரியும் எமது சகாக்களுக்கு பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எமது கிளையினதும், வாடிக்கையாளர்களினதும் சுபீட்சம் நிறைந்த, வளமான எதிர்காலத்திற்காக வேண்டிப்பிரார்த்திக்கின்றோம்.

மாலா சபாரட்ணம்
இயக்குநர்.
வட- கிழக்குப் பிராந்தியம்

*உங்கள் வெற்றியே! எங்கள் இலக்கு!*
Your Success is Our Goal

# THE FINANCE COMPANY LIMITED.

**NO.173, STANLEY ROAD, JAFFNA.**
**T.P.: 021 222 6256 FAX.: 021 222 2310.**
**e-mail: jaffna@thefinance.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் யாழ்வேந்தன் விநுஷன்

கைதடி கிழக்கு, கன்னிநகரைச் சேர்ந்த யாழ்வேந்தன் - சுவந்தினிதேவி தம்பதியரின் செல்வப்புதல்வன் விநுஷன்



தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (06.02.2006) திங்கட்கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அண்ணா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், அக்காமார், அத்தைமார், மாமா மார், மச்சான் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

கி.யாழ்வேந்தன் (அப்பா)

கன்னிநகர், கைதடி கிழக்கு. (46279)

"எற்கின் ஸ்பென்ஸ் ஓவர்சீஸ் ரவல்" நிறுவனத்தின் ஊடாக

குடும்பமாக வெளிநாடுசென்றுவர அரியவாய்ப்பு!

| | | | | |
|---|---|---|---|---|
| கொழும்பு → | கனடா | → கொழும்பு | 99,000 + TAX |
| கொழும்பு → | கனடா | | 55,000+ TAX |
| கொழும்பு → | லண்டன் | → கொழும்பு | 48,000+ TAX |
| கொழும்பு → | லண்டன் | | 38,000+ TAX |
| கொழும்பு → | பரிஸ் | | 38,000+ TAX |
| கொழும்பு → | பிராங்பேட் | | 38,000+ TAX |

சிங்கப்பூர் 38,500/= பாங்கொங் 38,900/=

* இருவழி விமானச் சீட்டு
* 3 இரவுகள் 4 நாள்கள் நட்சத்திர ஹொட்டலில் தங்குமிட வசதி (காலை உணவு)
* ஹொட்டல் விமான நிலையம் இருவழி போக்குவரத்து
* 1/2 நாள் நகர சுற்றுலா போன்ற அனைத்தும் உள்ளடங்கலாக

கனடா → கொழும்பு → கனடா

போன்ற அனைத்து சேவைகளுக்கும்

மற்றும் 10 ஆசனங்களைக்கொண்ட வான் சேவை

56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P:021 222 3771, 0777 915824 e-mail aitkenspence jf@ sltnet. lk (C/47617)

உங்கள் நம்பிக்கையான பயண நிறுவனம்

துயர் பகிர்கிறோம்



எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியரும் பகுதித் தலைவருமாகிய திரு.வா.சந்திரதேவன் அவர்களின் அன்பு மாமனார்,

அமரர்

கு.வி. மகாலிங்கம்

[சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், வித்துவான், மாணிக்கவாசக மன்ற செயலாளர் - கனடா]

கனடாவில் இறைபதமடைந்த செய்தியினைக்கேட்டு துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ மீசாலை வீரசிங்கம் ம.வி., மீசாலை.

அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்.

(46371)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

1. ஆங்கிலம் : பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்கள், அலுவலர்கள், பெற்றோர், இளைஞர்கள் மற்றும் வீட்டுப்பெண்களுக்கானது. காலம் : 3 மாதங்கள்

2. சிங்களம் : அன்றாட வசனங்களைக்கொண்டு முழுமையாக கதைப்பதற்கான பாடநெறி. காலம் : 2 மாதங்கள்

கட்டணம் ரூபா 3000/-

சிறப்புச்சலுகை முடிவு

இன்று பதிவுசெய்வோருக்கு 4000/- இற்கான ஆங்கில, சிங்கள, புத்தகங்கள், CD இலவசம்

SAAMSTECH

233/4, Kasthuriar Road, Jaffna

மெகா 2006

கணினி கற்கைநெறிகளுக்கான புலமைப்பரிசில்

WIN 75% SCHOLARHIP

புத்தாண்டில் ASIAN-CSC வழங்கும் கணினி கற்கைநெறிகளுக்கான புலமைப்பரிசில் பரீட்சை இம்முறையும் 7வது தடவையாக நடைபெறுகின்றது. இப்பரீட்சைகள் பொது அறிவு மற்றும் O/L பாடத்திட்டத்தை சார்ந்ததாக அமையும். தமிழ் அல்லது ஆங்கில மொழியில் வினாத்தாள்களை தெரிவு செய்யலாம்.

இப்புலமைப்பரிசிலில் வழங்கப்படும் பாடநெறிகள் யாவும் இங்கிலாந்து ICM, LACE, IMIS மற்றும் இந்திய CSC உயர்கல்வி கல்லூரிகளின் நேரடி அங்கீகாரம் பெற்றவை.

இப்புலமைப்பரிசில் பரீட்சை பெப்ரவரி 2ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 15ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும். மாணவர்கள் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு மணித்தியால பரீட்சைக்கான அனுமதிகளை (நீங்கள் விரும்பிய தினங்களில்) முன்கூட்டியே எமது பயிற்சி நிலையங்களில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

| | புலமைப்பரிசில்க்கான பாடநெறிகள் | | CODE |
|---|---|---|---|
| a | Advanced Diploma in Software Engineering | Duration 5 months | ADSE |
| b | Diploma in Office Automation | | DOA |
| c | Professional Diploma in Graphic Design | | PDGD |
| d | Advanced Diploma in Computer Programming | | ADCP |
| e | Advanced Diploma in Macromedia Applications | | ADMA |
| f | Advanced Diploma in Computer Hardware & Networking | | ADCHN |

| | CSC Computer Education - India Certification | | CODE |
|---|---|---|---|
| a | Diploma in PC Professionals | Duration 4 months | PCP |
| b | Diploma in Advanced Software Technology | | DASD |
| c | Diploma in Computer Application | | DCA |
| d | Diploma in Web Design & Development | | DWD |
| e | Honours Diploma in Computer Application | | HDCA |

நீங்க கொம்ப்யூட்டர் எக்கவுண்டன்ட் ஆகணுமா ?

Tally GRADUATE படிங்க



குறிப்பு : ஒருவர் ஒரு முறை மட்டுமே பரீட்சை எழுதலாம்.
ஒவ்வொரு முறையும் வினாத்தாள்கள் வெவ்வேறாக அமையும்.
இம்முறை பரீட்சைகள் எமது பயிற்சி நிலையங்களில் நடைபெறும்.

ASIAN COMPUTER SYSTEMS

யாழ்ப்பாணம் : 2 G, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel : 021-222 5677
ASIAN - CSC : 101, 2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் Tel : 021-222 8196
சுன்னாகம் : 108, K. K. S. வீதி, (Jet Motors) சுன்னாகம். Tel:071-2501589
நெல்லியடி : கொடிகாமம் ரோட், நெல்லியடி. Tel : 077 - 3122198
சாவகச்சேரி : கண்டி வீதி, சாவகச்சேரி. Tel : 077-3039587

## வடமராட்சியில் மீனின் விலை உயர்வு

வடமராட்சி,பெப்.6

வடமராட்சிப் பிரதேச சந்தைகளில் மீன் வகைகளின் விலைகள் உயர்ந்துள்ளன.

மீனவர்களில் பெரும்பாலானோர் இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றுள்ளதாலும், கடலில் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாலும் மீன் பிடித் தொழில் மிக மிகக் குறைந்துள்ளது.

இதனால் மீன் வகைகளின் விலைகள் வெகுவாக உயர்ந்துள்ளன. (எ-173)

## சிகரம் சஞ்சிகை வெளியீடு

வடமராட்சி,பெப்.6

உடுத்துறை மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர் மன்றத்தின் வெளியீடான 'சிகரம்' சஞ்சிகையின் நூல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சஞ்சிகையின் முதற் பிரதியை வடமராட்சி கல்விவலய கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா வெளியிட்டு வைக்க, நூலின் மதிப்பீட்டுரையை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் ஆ.சிவநாதன் நிகழ்த்துவார்.

(எ-6-173)

## தரம் 7,8 மாணவருக்கான அனேக நூல்கள் வரவில்லை

தென்மராட்சி,பெப்.6

தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கு கிடைத்துள்ள மாணவர்களுக்கான இலவச பாடநூல்களில் தரம் 8ஆம் வகுப்புகளுக்கு ஆங்கிலப் புத்தகம் தவிர்ந்த ஏனைய பாட நூல்களும் தரம் 7ஆம் வகுப்புகளுக்குரிய தமிழ், கணிதம் ஆகிய பாடநூல்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் தரம் 7ஆம் வகுப்புகளுக்குரிய தமிழ், கணிதம் ஆகிய பாடநூல்கள் கிடைக்காத நிலையில், கல்வி கற்ற மாணவர்களுக்கு இவ்வருடம் தரம் 8ஆம் வகுப்புகளில் தெரிவுப் பாடங்களாக உள்ள தமிழ், கணிதம் உட்பட ஏனைய புத்தகங்கள் கிடைக்காததையிட்டு ஆசிரிய சமூகத்தினர் கவலை தெரிவித்தனர். (எ-117)

## மின் தடையைப் பயன்படுத்தி கடையில் திருட்டு

மானிப்பாய்,பெப்.6

மானிப்பாய் பகுதியில் மின்தடை ஏற்படுவதை சாதகமாகப் பயன்படுத்தி திருட்டு இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 20 ஆம் திகதி மானிப்பாய் திருவள்ளுவர் சனசமூக நிலையப்பகுதியில் இரவு 7.15 மணிமுதல் 9.45 மணிவரை மின் விநியோகம் தடைப்பட்டிருந்தது. இதனைப் பயன்படுத்திய திருடர்கள், அப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து அங்கிருந்த 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

(எ-90)

## மண்கும்பானுக்கு மின் இணைப்பு வழங்கக்கோரிக்கை

புங்குடுதீவு,பெப்.6

மண்கும்பானுக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அப்பகுதி பொதுமக்கள் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இடம்பெயர்வைத் தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்தாங்கள், மின்சார இணைப்பை வழங்குமாறு கோரி பல தடவைகள் வேண்டுகோள்விடுத்திருந்ததாகவும்-

ஆனால், இதுவரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் - பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ்சேவை போதாது; பாதையும் சீரில்லை; முகமாலை - வெள்ளாங்குளம் பயணிகள் அவதி!

ஜெயபுரம்,பெப்.6

முகமாலை - வெள்ளாங்குளம் போக்குவரத்திற்குப் போதிய பஸ்சேவை இல்லாமையாலும் பாதைகள் சீரின்மையாலும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

முகமாலையிலிருந்து வெள்ளாங்குளத்திற்குப் புறப்படும் பஸ் முறிப்பு, கோணாவில், ஸ்கந்தபுரம், அக்கராயன், வன்னேரி, ஜெயபுரம், முழங்காவில் ஊடாகச் சென்று வெள்ளாங்குளத்தை அடைகின்றது. இதனால், பயணிகள் நெருக்கமாக ஏற்றப்படுகின்றனர்.

பாதையும் சீரில்லாததால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுடனேயே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனப் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(த-291-202)

## சைவச் சிறுவர் இல்லம் சிரமதானம்

பரந்தன்,பெப்.6

புதுமுறிப்பு மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்ல வளாகத்தில் அண்மையில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

ஊற்றுப்புலம் கிராம மக்களும் ஊரக வளர்ச்சிப் பணியினரும் இணைந்து இச் சிரமதானத்தை மேற்கொண்டனர்.

கிராம சேவை அலுவலர் சிவநேசன் தலைமையில் நூற்றுக்கும் அதிகமானோர் சிரமதானத்தில் ஈடுபட்டனர். (த-352-202)

## செந்தளிர் இல்லத்திற்கு ஜெனரேட்டர் அன்பளிப்பு

வட்டக்கச்சி,பெப்6

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள செந்தளிர் சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் ஜெனரேட்டர் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் இருந்து வருகை தந்திருந்த வைத்திய கலாநிதி போலின் நிதியுதவியுடன் இந்த ஜெனரேட்டர் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

(த-405-203)

# பயிர்களில் நோய்த்தாக்கம் உரிய நடவடிக்கைகள் தேவை

## விவசாயப் போதனாசிரியர் அறிவுறுத்து

ஒட்டுசுட்டான்,பெப்.6

தற்போது நிலவும் காலநிலையில் விவசாயச் செய்கையில் பல நோய்த் தாக்கங்கள் ஏற்படும் சாத்தியக் கூறுகள் உள்ளன. கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் ஒட்டுசுட்டான் விவசாயப் போதனாசிரியர் ஜெயகாந்தன்.

இன்றைய காலநிலையில் விவசாயப் பயிர்களில் பங்கசு, மடிச்சுக்கட்டி, எரிபந்தம் போன்ற நோய்கள் ஏற்படும் சாத்தியம் உள்ளன. இதனால் விவசாயச் செய்கைகள் பாதிப்படையலாம்.

எனவே 'கினோசாற்' கிருமிநாசினியைப் பாவித்து நோய்களைக் கட்டுப்படுத்துங்கள் - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(த-341-202)

## தேடல் அறிவோர் ஒன்றுகூடல்

புதுக்குடியிருப்பு,பெப்.6

முள்ளியவளை நுண்கலைக் கல்லூரியில் தேடல் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் திருமதி இ.மணிமொழி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறுவர் அரங்கு, ஆய்வரங்கு என்பன நடைபெற்றன.

இந்நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள் பாடசாலைகளின் ஆரம்பக்கல்வி, ஆசிரியர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(த-353-203)

## கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தர் காயம்

புதுக்குடியிருப்பு, பெப்.6

வயல் பார்க்கச் சென்ற குடும்பஸ்தர் கட்டுத்துவக்கு வெடித்ததில் படுகாயமடைந்தார். இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை தண்ணிமுறிப்புப் பகுதியில் இடம்பெற்றது.

குமுழமுனை 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிவஞானம் (வயது 57) என்பவரே சம்பவத்தில் படுகாயமடைந்தார்.

காலையில் வழமைபோல் வயல் பார்க்கச் சென்ற சமயத்தில் கட்டுத்துவக்கு வெடித்துள்ளது. படுகாயமடைந்தவரை வயலில் நின்றவர்கள் முள்ளியவளை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கட்டுத்துவக்குக் கட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. துவக்குக் கட்டியவர்களை முள்ளியவளை காவல்துறையினர் தேடிவருகின்றனர்.

(த-353-202)

# முழங்காவில் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு திருத்தம்

முழங்காவில்,பெப்.6

முழங்காவில் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இந்த வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவை முழங்காவில் அரசினர் வைத்தியசாலையினர் முழங்காவில் மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தினரின் அனுசரணையுடன் புனரமைப்புச் செய்துள்ளனர்.

(த-323-203)



முல்லைத்தீவு வெட்டு வாகல் அ.த.க.பாடசாலையில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம் இது. [த-353]

# பூநகரிப் பிரதேசத்திலுள்ள அஞ்சலகங்கள் புனரமைப்பு

முழங்காவில்,பெப்.6

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முழங்காவில் விநாயகபுரம் உப அஞ்சல் அலுவலகம் 'நிகொட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த அஞ்சல் அலுவலகம் போர்க்காலத்தில் மிகவும் பாதிப்படைந்திருந்தது.

தற்போது 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் இந்த அஞ்சலகம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வன்னேரிக்குளம், அக்கராயன்குளம், ஸ்கந்தபுரம் ஆகிய இடங்களிலுள்ள உப அஞ்சல் அலுவலகங்களும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இந்த இடங்களில் அமைந்துள்ள அஞ்சல் அலுவலகங்கள் போர்க்காலத்தின் போது சேதமடைந்தமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(த-323-203)

# மன்னார் இலுப்பைக்கடவையில் பெண்களுக்கு தற்காப்புப் பயிற்சி

ஒட்டுசுட்டான்,பெப்.6

பெண்களுக்கான தற்காப்புப் பயிற்சி மன்னார் இலுப்பைக் கடவையில் நடைபெற்று வருகின்றது.

பயிற்சியின் ஆரம்ப வைபவம் கடந்த திங்கட்கிழமை இலுப்பைக் கடவை தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் இடம் பெற்றது.

இலுப்பைக் கடவைப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கவிப்பிரியா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை 2ஆம் லெப்ரினன்ட் அன்புவின் தாயார் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை மன்னார் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவரசி ஏற்றினார்.

பயிற்சியை பயிற்சி ஆசிரியர் கவிப்பிரியா ஆரம்பித்து வைத்தார். சிறப்புரையை கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் டென்சில் நிகழ்த்தினார்.

(த-341-202)




# இலவச பாடநூல்கள் வரவில்லை; மேற்பிரிவு மாணவர்கள் சிரமம்!

## ஒட்டுசுட்டான் கல்வி அதிகாரி கூறுகிறார்

ஒட்டுசுட்டான்,பெப்.6

ஒட்டுசுட்டான் கோட்டப் பாடசாலைகளுக்கு மேற்பிரிவுக்கான இலவச பாடநூல்கள் கிடைக்கவில்லை. இதனால் மாணவர்களின் கற்றலில் பின்னடைவு ஏற்படும் நிலையுள்ளது.

இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார் ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி சி. ஜெயபாலன்.

ஆரம்பப் பிரிவுக்கான இலவச பாடநூல்கள் மட்டுமே எமது கோட்டப் பாடசாலைகளுக்குக் கிடைத்துள்ளன. மேற்பிரிவு மாணவர்களுக்கான பாடநூல்கள் கிடைக்கவில்லை. எனவே மாணவர்கள் கற்றலில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று அவர் கூறினார். இந்த விடயத்தில் உரிய தரப்பினர் அக்கறை கொண்டு பாடநூல்களை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(த-341-202)

# கேணல் கிட்டு வரைந்த ஓவியங்களின் கண்காட்சி

மல்லாவி,பெப்.6

விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவினால் வரையப்பட்ட ஓவியங்கள் கண்காட்சி கடந்த மாதம் இறுதியில் மல்லாவி நுண்கலைக் கல்லூரியில் நடைபெற்றது.

மல்லாவி நுண்கலைக் கல்லூரி அதிபர் சி.சிவசத்தியமோகன் தலைமையில் நடைபெற்ற இக்கண்காட்சியில் தமிழீழ தேசியக் கொடியை அன்பு மாஸ்டர் ஏற்றி வைத்தார். கேணல் கிட்டுவினது திருவுருவப்படத்திற்கு கிராம சேவையாளர் சண்முகநாதன் ஈகச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

மங்கள விளக்கினை துணுக்காய் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இராஜேஸ்வரன், முல்லைத்தீவு, யோகபுரம் மகா வித்தியாலய அதிபர் திருமதி க.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இவ் ஓவியக் கண்காட்சியை துணுக்காய் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

கண்காட்சியில் கேணல் கிட்டுவினால் வரையப்பட்ட 16 அற்புதமான ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன - இதைவிட கேணல் கிட்டுவின் போராட்ட வரலாற்றுப் புகைப்படங்களும் பிறிதோர் மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இக்கண்காட்சியை ஆசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்கள், போராளிகள், பொது மக்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் பார்வையிட்டனர்.

கண்காட்சியின் இறுதியில் இவ் ஓவியங்கள் தொடர்பான கருத்துப் பகிர்வு நிகழ்வும் நடைபெற்றது.

(6-322)

## கறுங்கேணியில் கூ.சங்கக் கிளை

புதுக்குடியிருப்பு,பெப்.6

கறுங்கேணியில் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது. கரைதுறைப்பற்று ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்றே கறுங்கேணியில் அமைக்கப்படவுள்ளது.

இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி கரைதுறைப்பற்று ப.நோ. கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.சிவபாலன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவியாளர் செ.சின்னத்தம்பி அடிக்கல்லை நட்டு வைத்தார். (த-353-203)



காரைநகர் தோப்புக்காட்டிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பூநகரிப் பிரதேசத்திலுள்ள வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ளனர். அங்கு தங்கியுள்ள மக்களின் விவரங்களைப் பொன்னாவெளி கிராம சேவையாளர் த.மகாதரன் பதிவு செய்வதை முதலாவது படத்திலும் - மக்கள் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டிருப்பதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். [படங்கள்:பிரசாத்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO. THERAPY)
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

07-02-2006 - 11-02-2006

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!
☼ சக்தி குறைவு ☼ ஞாபக ுதி ☼ பயம் ☼ நடுக்கம்
☼ நித்திரைக் குறைவு ☼ ஆண்மைக் குறைவு ☼ நீரிழிவு நோய்
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
**பிரபல மனோதத்துவ நிபுணர்**
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)
(சி-47706)


# இருபது பவுண் நகை திருட்டு
## மட்டுவிலில் சம்பவம்

தென்மராட்சி, பெப். 6

இரவுவேளை வீட்டில் புகுந்து அங்கிருந்த பெண்களை துப்பாக்கியைக்காட்டி பயமுறுத்திய நபர்கள், அங்கிருந்த நகை, பணம் உட்பட 4 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையான பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் அண்மையில் மட்டுவில் சிவன் கோயில் வீதியில் இடம்பெற்றது. தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தில் இரவுக்காவலாளியாகக் கடமையாற்றும் சண்முகம் கிரிதரன் என்பவரின் வீட்டிலேயே இந்தக் கொள்ளை இடம் பெற்றுள்ளது.

இருபது பவுண் தங்க நகைகள், 25 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் இரண்டு கையடக்கத் தொலைபேசி, நவீன சிறிய ரக டிஜிற்றல் கணனிகள் இரண்டு ஆகிய பொருள்களே இவ்வாறு அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்தக் கொள்ளை தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-117)

# பக்ஸ் இயந்திரம் கிடைத்தது

குருநகர், பெப்.6

யாழ். கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியின் பாவனைக்கென கொழும்பிலுள்ளஅதன் தலைமை அலுவலகம் பக்ஸ் இயந்திரம் ஒன்றை வழங்கியுள்ளது. (எ-51)

# சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையில் நூலகம் திறந்து வைக்கப்பட்டது

குருநகர், பெப்.6

யாழ். சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலையில் கற்கும் மாணவிக்ளின் வசதிகருதி நூலகம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டில் வசித்து வரும் குருநகரைச் சேர்ந்த அமலராயர் றொபின்சன் குடும்பத்தவர்களின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட இந்த நூலகத்துக்கு அமரர் அமலராயர் றொபின்சன் ஞாபகார்த்த நூலகம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

யாழ். சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபர் திருமதி லூ. மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வணபிதா. ஆர்.எச் சகாயநாயகம் அடிகளார், பாடசாலை அபிவிருத்திசசங்கத்தின் உப தலைவர் கி. கிறிஸ்தோப்பர் மற்றும் அமரர் றொபின்சனின் சகோதரியும் கலந்து கொண்டனர். (எ- 51)

# முதலாம் வருட நினைவு



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும்
ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்
**சின்னத்துரை மகாலிங்கம்**
(தொழில் நுட்பக் கல்லூரி பிரதம எழுதுநர், கௌரவ செயலாளர், ஊழியர் ஐக்கிய நாணயசங்கம், கொக்குவில்)

மலர்வு 09.06.1949 உதிர்வு 18.01.2005

திதி: 06.02.2006

பாசமுடன் எமை வளர்த்துப் பார்புகழ வைத்தவரே
நேசமுடன் ஊர் உயர உறங்காது உழைத்தவரே!
வாசமுள்ள மலரது போல மணம் பரப்பி நின்றவேளை-எமை
வாழ வைக்க முன் வானுலகம் சென்று - இன்று
ஆண்டொன்று ஆனதுவே.
கலையாத நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.
(46365)

உங்கள் நினைவுகளோடு வாழும்:
மனைவி,அம்மா,பிள்ளைகள்,
சகோதரர்கள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 31 10 1964
மறைவு 18 02 2005

திருமதி
**விக்னேஸ்வரன் பற்குணலக்சுமி (றஞ்சா)**

திதி: 06.02.2006

எங்கள் அன்புக் குலதெய்வமே
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எங்கள் துயரம்
உங்கள் அன்பும் உருவமும்
எங்கள் மனதில் என்றும்
வாழ்ந்து கொண்டு இருக்கும்.

பாடசாலை வீதி,
சங்கானை.
(46381)

விக்னேஸ்வரன் (கணவர்),
பிள்ளைகள்,
நிரந்தர முகவரி:- அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## திருமதி நல்லநாதர் தங்கம்மா



பிறப்பு 14.04.1913 இறப்பு 09.01.2006

கடந்த 09.01.2006 அன்று காலமான எமது குடும்பத்தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச் செய்தியினை வழங்கியோருக்கும் சகல வழிகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (07.02.2006) செவ்வாய்க்கிழமை மதியம் ஒருமணி தொடக்கம் மாலை 5மணிவரை அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள் ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- நாளைமறுதினம் 08.02.2006 அன்னாரின் வீட்டிற்கு அருகிலுள்ள வல்வெட்டி வேவில் பிள்ளையார் அன்னதான மடத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளும் வண் ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிற் குறிப்பு:-தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப்பெறாதவர்களும் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கொத்தன்கலட்டி, வல்வெட்டி.
(57053)

குடும்பத்தினர்.
மருமகன்:.க.யோகேஸ்வரன்
(நியூசிலாந்து)

# 3 ஆம் வருட நினைவலைகள்



அமரர்
**கதிரவேலு சுந்தரம்**

மலர்வு 10.06.1930 உதிர்வு 10.02.2003

திதி; 06.02.2006 நவமி

உழைப்பால் உயர்ந்து எங்களையும் உயர்த்திய
எங்கள் தெய்வமே!
உங்கள் நினைவுகள் என்றும் எம்மைவிட்டு அகலாது!

அன்பின் மனைவி சு.இராசம்மா,
பிள்ளைகள்: உதயசீலன் குடும்பம்(சுவிஸ்), தர்மசீலன் குடும்பம் (கனடா)
உதயபவனம், உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கின் மனநிலை மாறாவிடில் புலிகள் பேச்சுக்குப் போவதை மக்கள் தடுப்பர்

## நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் கருத்து

கிளிநொச்சி,பெப்.6

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் பயங்கரவாதச் செயல்கள் நிறுத்தப்பட்டு, தென்னிலங்கையின் மனநிலையில் மாற்றம் ஏற்படவில்லை என்றால் தமிழ் மக்கள் தங்கள் தலைவர்களைப் பேச்சுக்கு அனுப்பமாட்டார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் கடத்தப்பட்டதைக் கண்டித்து கிளிநொச்சியில் கடந்த வியாழனன்று நடத்தப்பட்ட கண்டனப் பேரணியில் அவர் உரையாற்றினார்.

அவர் அங்கு கூறியதாவது:-

இவ்வாறு வடக்கு - கிழக்கு எங்குமே புதிய ஜனாதிபதியின் வருகைக்கு பின்னர் ஓர் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இந்த அரச பயங்கரவாதத்தால் ஒரு பகுதியினர் அச்சமடைந்தார்கள். இன்னொரு பகுதியினர் ஆத்திரமடைந்தனர். ஆத்திரமடைந்த இளைஞர்கள் இதனைக் கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தைத் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்கள். ஒரு பயச் சூழலும், ஓர் ஆத்திரச் சூழலும் நிறைந்த நிலையிலேயே வடக்கு - கிழக்கு பகுதி இருந்தது. இந்த நிலையில் சர்வதேச நாடுகள் தலையிட முன்வந்தன. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல்படுத்துவது தொடர்பான பேச்சில் ஈடுபடும்படி அவர்களின் கோரிக்கைக்கிணங்க, எங்களுடைய தலைவர் அவர்களும் புதிய ஜனாதிபதிக்கு மேலும் சந்தர்ப்பம் வழங்க உடன்பட்டு, தமிழ் மக்களுடைய நல்லெண்ணத்தை வெளியுலகுக்குக் காட்டுவதற்காகக் கைதுசெய்து வைக்கப்பட்டிருந்த ஒரு பொலீஸாரையும் விடுவித்து ஒரு நல்லெண்ண சூழலை ஏற்படுத்த முயன்றார். ஆனால், அன்று மாலையே வெலிகந்தையில் மேஜர் கபிலன் என்கின்ற மூத்த போராளி கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து இப்போது தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் கடத்தப்படுகின்றார்கள். சிங்கள ஆட்சியாளர்கள் பேச்சு என்பதை உதட்டளவில் சொல்லிக்கொள்கின்றார்கள். தமிழர் உரிமைகளை ஏற்றுக்கொள்ள விரும்பாத மன எண்ணத்தை உள்மனதில் வைத்திருக்கின்றார்கள். அதன் காரணமாகவே வெளியுலகுக்குத் தெரியாத வகையில் இத்தகைய பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுகின்றார்கள்.

இந்தத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் யார் என்று சொன்னால், போரினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் மிகவும் நலிந்துபோன மக்களுக்காக உதவி புரிகின்றவர்கள். அப்படிப்பட்ட ஊழியர்களை கடத்தியதானது அவர்களுக்கு உண்மையில் அமைதி வழியில் தீர்வு வருவதில் நாட்டமில்லை என்பதைத்தான் காட்டுகின்றது. இந்த நிலையில் அவர்களிடம் தொடர்ந்து விசாரணைக் கொமிசன்களை வையுங்கள் என்று நாங்கள் கேட்கவரவில்லை. இதுவரை அவர்கள் அமைத்த ஆணைக்குழுக்களுக்கு என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியும். பிந்துனுவெவவுக்கு நடந்தது என்னவென்றும் தெரியும். இவர்களுடைய ஆள்களை இவர்களே விசாரிப்பதற்கான ஆணைக்குழுக்களை அமையுங்கள் என்று நாங்கள் கேட்கவில்லை. இவர்களுக்கு அதாவது, சிங்கள ஆட்சியினருக்கு உண்மையிலேயே சமாதானத்தில் விருப்பம் இருந்தால் தங்களது ஆள்களை அதாவது சிங்களப் படையினரை உடனடியாகத் தமிழ் பகுதிகளில் இருந்து விலக்க வேண்டும். இப்போது உடனடியாக தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களை விடுவிக்க வேண்டும்.

சர்வதேச நாடுகளிடமும் நாங்கள் சொல்வது என்னவென்றால் மனிதாபிமான பணிகளை புரிகின்ற இந்த அரசசார்பற்ற நிறுவனத்திற்கு நடந்திருக்கின்ற நிகழ்வு மற்றைய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் நடக்கலாம். இந்த நிலையில் உடனடியாக தெற்கிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். அதன் மூலம் தெற்கு மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் - என்று தெரிவித்தார். (ஐ)





பலாலி ஆசிரிய கலாசாலையின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் அதிபர் இ.சதாசிவமூர்த்தியின் சேவையைப் பாராட்டி கல்வியங்காடு ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் கடந்த வெள்ளியன்று திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரிய கலாசலை மாணவர்களையும் அதிபர் கு.சதாசிவமூர்த்தி பதிலுரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: வலி.கிழக்குச் செய்தியாளர்)*

### சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.6

ஐக்கிய நாடுகள் வதிவிட நிறுவனம் (யூ.என். கபிரட்) சமூகங்களை மீள் கட்டி எழுப்புதல் என்னும் திட்டத்தின் கீழ் யாழ். மாநகர சபை எல்லைக்குள் தெரிவுசெய்யப்பட்ட10 கிராமங்களில் சமூக அபிவிருத்திச் சபைகளின் ஊடாக வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக நாயன்மார்கட்டு சங்கிலியன் வீதியில் முன்பள்ளிக்கட்டடமும் நாயன்மார்கட்டு மூத்தவிநாயகர் ஆலயப் பகுதியில் கழிவுநீர் வாய்க்காலும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. (எ-190)

## உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதாக இதுவரை 15 அரசியல் கட்சிகள் அறிவிப்பு

கொழும்பு,பெப்.6

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் 15 கட்சிகள் போட்டியிடவுள்ளன. இது குறித்து தேர்தல் திணைக்களத்துக்கு அக்கட்சிகள் அறிவித்துள்ளன.

ஐ.தே.கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் , ஜே.வி.பி. உட்பட 15 கட்சிகள் இது குறித்து அறிவித்துள்ளன என்று தேர்தல் ஆணையகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? என்பது பற்றித் தேர்தல் ஆணையாளர் பதிவுசெய்யப்பட்ட 52 கட்சிகளிடம் கடிதம் மூலம் கருத்துக்கேட்டிருந்தார்.

இதேவேளை -

10 சுயேச்சைக் குழுக்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன.

கொழும்பு, அம்பாறை, மாத்தளை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டத் தெரிவித்தாட்சி அலுவலகங்களில் இந்தக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் இந்த மாதம் 15ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை கட்டுப்பணத்தைச் செலுத்தலாம் என்று தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது. (ஐ-13)

### வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்கத் தலைவி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் தலைமையில் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அண்மையில் இடம்பெற்ற மத்தியஸ்தர் பரீட்சையில் தோற்றியவர்களையும் ஏற்கனவே மத்தியஸ்தர்களாக உள்ளவர்களையும் தறவாது கலந்து கொள்ளுமாறு வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் திருமதி ஜெ.சரவணபவ ஐயர் கேட்டுள்ளார். (எ-6)



யாழ். சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் பரிசுத்தின நிகழ்வின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் சண்முகதாஸ், பாடசாலை அதிபர் திருமதி லூ.மகேஸ்வரன், உப அதிபர் திருமதி அ.செ.சௌந்தரநாயகம் மற்றும் பாடசாலை ஆசிரியர் குழாத்தினரால் நிகழ்வு மண்டபத்திற்கு அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம்.

(படம்: குருநகர்ச் செய்தியாளர்)

## 'டயலொக்' 'சிம்' கார்ட் விற்பனையில் மோசடி என்று பாவனையாளர் புகார்

'டயலொக்' செல்லிடத்தொலைபேசியின் 'சிம்' கார்ட் விற்பனையில் முறைகேடு இடம்பெறுகின்றது. எனவே பாவனையாளர்கள் 'சிம்' காட்டை 'டயலொக்' அலுவலகங்களில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடம் பெற்றுக்கொள்ளும்படி 'டயலொக்' நிறுவனத்தின் யாழ். அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்றில் ஒரு வருடத்திற்கு முன்னர்'சிம்' கார்ட்டைப் பெற்றுக்கொண்ட பாவனையாளர் ஒருவர் தற்பொழுது தமது 'சிம்'காட் வேறொருவரின் பெயரில் பதியப்பட்டுள்ளதை அறிந்துகொண்டார். இதனை அடுத்து சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக பாதிக்கப்பட்டவர்கள் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்திற்கு வந்திருந்தார்கள்.

இவ்விடயம் தொடர்பாகவே 'டயலொக்' நிறுவனத்தின் யாழ். அலுவலக அதிகாரியிடம் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் பாவனையாளர்களுக்கு இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாதவது:-

முகவர் ஒருவருடைய பெயரில் பதிவு செய்யப்பட்ட 'சிம்'காட்டை வேறொரு பாவனையாளருக்கு விற்பனை செய்வது தவறு. ஆனால் தம்மால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் இவ்வாறான முறைகேட்டில் ஈடுபடமாட்டார்கள். அங்கீகரிக்கப்படாத முகவர்களே இவ்வாறான முறைகேடான செயல்களில் ஈடுபடுகின்றார்கள்.

இவ்வாறான முறைகேடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகப் பாதிக்கப்பட்டவர்களால் சட்டநடவடிக்கை எடுக்கமுடியும்.

ஆனால் பாவனையாளர்கள் 'சிம்'காட்டை கொள்வனவு செய்யும் போது விழிப்போடு இருக்கவேண்டும் - இவ்வாறு அவர் கூறினார். (ஐ-14)

## பிரான்பற்று, யாவத்தைப் பகுதி மக்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.6

பிரான்பற்று, யாவத்தைப் பகுதியில் வறுமை நிலையிலுள்ள 56 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளையும், குடிதண்ணீரையும் வழங்குவதற்கு பட்டினிக்கு எதிரான நிறுவனம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் பட்டினிக்கெதிரான திட்டப் பணிப்பாளரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

இது விடயமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில்-

வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பிரான்பற்று, யாவத்தைப் பகுதியில் வசிக்கும் மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

எனவே, முதற்கட்டமாக, யாவத்தைப் பகுதியில் உள்ள 56 குடும்பங்களின் வறுமை நிலையைப் போக்குவதற்குத் தங்கள் நிறுவனம் வாழ்வாதார உதவிகளை வழங்க முன்வரவேண்டும்.

அத்துடன், அப்பகுதி மக்களின் மலசலகூடம் மற்றும் குடிதண்ணீர்த் தேவைகளையும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.

இதேவேளை, மேற்படி குடும்பங்கள், தமது பகுதியை அபிவிருத்தி செய்யுமாறு பிரதேச சபைக் கூட்டத்திலும் வலி.தென்மேற்கு ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலும் பல முன்மொழிவுத் திட்டங்களை முன்வைத்தபோதும், தமக்கு எதுவித உதவிகளும் கிடைக்கவில்லை என்றும் - கூறிவருகின்றனர்.

எனவே, முதற்கட்டமாக, யாவத்தையில் உள்ள 56 குடும்பங்களின் வாழ்வாதாரம், குடிதண்ணீர், மலசலகூடப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத்தருமாறும் எம்மிடம் கோரியுள்ளனர் - என்று அதில் உள்ளது. (எ-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பலசரக்குக் கடைக்குத் தேவையான விறாக்கை, கண்ணாடி சோக்கேஸ், தராசு, மேசை போன்ற தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P. 0776147361.(46453)

P3, P4 கணனிகள், Sisil R-80 பிரிட்ஜ், ஏஷியா லேடிஸ் சைக்கிள், ¾ HP New tone மோட்டார் என்பன விற்பனைக்குண்டு. இல. 5, வைமன் வீதி, நல்லூர். (46464)

## கடைக்கட்டடம் விற்பனைக்கு

சுன்னாகம், பஸ்நிலையத்துக்கு முன்பாக கடைக்கட்டடம் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்புகளுக்கு: இ. இரவீந்திரகுமார் (ரவி).
T.P. 0777118979, 0779233387. (46356)

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, பலாலி றோட்டிற்கு அருகில் புதிய வீடு 3 அறை, இணைந்த குளியலறை கொண்டது. முற்றிலும் (Tiles) பதிக்கப்பட்டது. சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0773114791, 021 222 6379. (46336)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

சொந்தப் பண்ணையில் வளர்க்கப்பட்ட 2 மாதம் வளர்ச்சியடைந்த பிறிமா இன முட்டை இடும் கோழிக்குஞ்சுகள், கல்பேட்ஸ், இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஞானசெந்தூரன், அபிராமி மஹால், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
021 226 3403(சி/47772)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்புமருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 06.02.2006 திங்கள் பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை-நெல்லியடிக் கிளைகளிலும், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர்- 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-47500)

## தவறிவிட்டது

சூறாவத்தை, சுன்னாகத்தைச் சேர்ந்த ஆனந்தராஜா பிரதாபன் என்பவரது தேசிய அடையாள அட்டை (822423477V) மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் சுன்னாகத்திற்கும்திருநெல்வேலிக்கும் இடையில் 04-02-2006 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
T.P. 0779073702, 0776006238. (46399)

## மணமகள் தேவை

யாழ். கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் சத்திரசிகிச்சை நிபுணர் ஆஸ்திரேலியாவில் வதிவிட உரிமைபெற்றவர். வயது 30, உயரம் 5'10'' நிறமானவர். Dr. மணமகளைத் தேடுகிறார். தொடர்பு: 82/ 2/1, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13. T.P. 2381299, 2360733. 346/ 1/1, காலி றோட், வெள்ளவத்தை-06 . (சி/47705)

## காணவில்லை

நீராவியடி பிள்ளையார் கோயிலடியில் பசுமாடும் கன்றும் கயிற்றோடு காணாமல் போய்விட்டன. அடையாளம் ஒன்றும் இல்லை. பால் இனமாடு, கபில நிறம் உயரமானது. கன்று வெள்ளை நிறம். 6 மாதம். தகவல் தெரிந்தவர்கள் நீராவியடி பிள்ளையார் கோயில் குருக்களிடம் அறியத்தரவும்.
(46465)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி, இராஜபாதை வீதியில் 3 அறைகொண்ட வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: கேமா குணபாலன் (விவாகப் பதிவாளர் இல்லம்), 110/9, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி (மாலையில் சந்திக்கவும். ) (46466)

## சித்திர வகுப்பு

**தரம் 6 தொடக்கம் O/L, A/L வரை**

Theory and Practical

**IAT சித்திரப் பயிற்சி நிறுவனம்**

ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்.
T.P.: 0714168438 (46461) (24)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1974 | 2006 |
| 04 | 12 |
| 07 | 24 |

## கிருஷ்ணன் விமலேஸ்வரன்

(யாழ். மத்திய கல்லூரி பாதுகாப்பு உத்தியோகத்தர்)

நிலையில்லாத உலகில்
நிலைத்துவிட்ட உன் அன்பால்
நினைவிழக்க முடியாது - நாம்
நீந்துகின்றோம் தினம் கண்ணீரில்...

கடந்த 24.12.2005இல் அகால மரணமடைந்த கிருஷ்ணன் விமலேஸ்வரன் (செல்வம்) அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும், யாழ். மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் மற்றும் தவசிகுளம் வாழ். நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (06.02.2006) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் 45ஆம் நாள் நினைவஞ்சலியிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தவசிகுளம்,
கொடிகாமம். (46466) (24-11-19) - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சக ஆசிரியை சுகந்தினி சந்திரதாஸ் அவர்களின் அன்புத் தந்தை **சோமசுந்தரம் சந்திரமோகன்** அவர்கள் 23.01.2006 அன்று சிவபதமடைந்த செய்தியினை அறிந்து அதிர்ச்சியடைந்த நாம், அன்னாரது மறைவால் துயருற்று இருக்கும் ஆசிரியைக்கும் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சகோதரத்துவம்
கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயம்,
வேரவில், பூநகரி.
(46396) (24)

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

மலேசியா, டோகா, கட்டார், டுபாய் ஆகிய நாடுகளில் உடனடி வேலை வாய்ப்பு

### ஒரு மாதத்தில் பிரயாணம்

★ டோகா, கட்டார், டுபாய்

தச்சுவேலை, மேசன் வேலை, பார்பைன்டர்ஸ், எலக்றீசியன், பிளம்பர், சாரதி, OFFICE BOY, விமான நிலையத் துப்புரவுத் தொழிலாளர், பொதி சுமப்போர் (PORTERS)

★ மலேசியாவில்

ஆண்/ பெண் இருபாலாருக்கும் பின்வரும் துறைகளில் வேலை வாய்ப்பு
சுப்பர் மார்க்கட், கொம்பியூட்டர் கம்பனி, தையல் வேலை, பொது வேலை, துப்புரவுத் தொழிலாளர், உதிரிப்பாக உற்பத்தியாளர்

தொடர்பு:

**RAINBOW TRAVELS and TOURS**
32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777328219, 021 222 3237.
(c/.47352) (39.11.42)

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி சின்னத்துரை பற்குணலட்சுமி (றஞ்சா)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 31-09-1964 | 17-02-2005 |

வடமராட்சி மண்ணில் மலர்ந்த
எங்கள் அன்பு மலரே!
ஆறிரண்டு மாதங்களாகியும்
உன் நினைவை எங்களால்
- மறக்க முடியவில்லையே

எங்கள் அன்புத் தங்கை றஞ்சாவின் ஓராண்டு நினைவாக இன்று திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன கேட்டுக்கொள்கிறோம்.

அன்னவாசம்,
கல்லூரி வீதி, [illegible]
பருத்தித்துறை. — சகோதர சகோதரிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகிறோம்



அகில இலங்கை D.A.M.
பட்டதாரிகள் சங்கத்தலைவரும்
சமூகத் திலகமும் பௌராணிகருமாகிய
**டாக்டர் கந்தையா நவரத்தினம்**
(D.A.M., R.I.M.P. Cey.) அவர்கள்
01.02.2006 அன்று யாழ். மாவட்ட
நீதிமன்ற மேலதிக நீதிபதி
திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்
முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம் செய்ததையிட்டு மனம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சங்கத்தின் வளர்ச்சிக்காய்
சளைக்காமல் பணியாற்றி
சாதனைகள் பல படைத்த
எம்தலைவா வாழ்க நீடூழி!
வளர்க உன் பணி!!!

அகில இலங்கை D.A.M. பட்டதாரிகள் வைத்திய சங்கத்தினர்,
யாழ்ப்பாணம்.
(46459) (24-11-19)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 752 | முக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 03-02-2006 | செல்லுபடியாகும் தொடர் இல. | 5968900-5982246 |

வெற்றி இலக்கங்கள் **31 44 49 50**

லக்கினம் மிதுனம்

ஜக்பொட் பரிசு ரூபா. 17,33,100/- வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 24,00,450/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,98,854 | 10/- | 29,88,540/- |
| 2.இலக்கங்கள் | 27,402 | 20/- | 5,48,040/- |
| 1.இல லக்கினம் | 27,213 | 30/- | 8,16,390/- |
| 2.இல லக்கினம் | 2,516 | 100/- | 2,51,600/- |
| 3.இலக்கங்கள் | 743 | 500/- | 3,71,500/- |
| 3.இல லக்கினம் | 58 | 5,000/- | 2,90,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 17,33,100/- | - |
| | | மொத்தம் | 56,66,070/- |
| [illegible] | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 67,18,320/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 67,18,320/- [illegible] 2006 பெப்ரவரி 07 ஆம் திகதி [illegible]

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 30 [illegible] கொழும்பு 03.

| | |
|---|---|
| [illegible] | 5977101-2-24 |
| கொழும்பு | 5977969-3-29 |
| [illegible] | 5976658-5-48 |
| [illegible] | 5974482-8-96 |
| [illegible] | 5969194-4-70 |

## 60ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**நாகநாதர் இராமச்சந்திரன்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 | 10 |
| 04 | 12 |
| 1952 | 2005 |

திதி: 07-02-2006
பூர்வபக்க தசமி

அப்பா என்று நாங்கள் அழைக்க
அருகில் இன்று நீங்கள் இல்லை
இதயம் நெருடும் 60ஆம் நாளில்
ஏக்கத்துடன் இருக்கிறோம்.
எம் வாழ்வு வளமுடன் பிரகாசமாய் ஒளிர
கஷ்டமான காலத்திலும் கடினமான வாழ்க்கையை
சுவிஸ் மாநகரில் கழித்தீர்கள் - அப்பா
தன் வசந்தம் காண முன்பு வானுலகம் சென்றார் அண்ணா
அவர் பின்னால் நீங்களுமா அப்பா?
கண்முன்னே நிழலாடும் எம் இளமை காலத்தை
வளப்படுத்தி சிறப்பாய் அமைத்திட நீங்கள் இல்லையே - அப்பா
அமைதியுடன் சாந்தி கொள்க மகனுடன்.

கடந்த 10-12-2005இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் செய்திகேட்டு தொலைபேசி மூலமாகவும் நேரிலும் வருகை தந்து எமது துயரத்தில் பங்குகொண்டு இறுதிக்கிரியைகளின்போது சகல வழிகளிலும் உறுதுணையாக நின்று உதவி புரிந்த சகலருக்கும் சுவிஸ் வாழ் நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம். நாளை (07-02-2006) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருக்கும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: ந.விநாயகமூர்த்தி.
அல்லாரை தெற்கு, மீசாலை.
தொ.பே. 0779567094 (46398) (24-11-19)

அன்னாரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# தொலைக்காட்சி நிகழ்வில் நெரிசல் 88பேர் பலி; 300 பேருக்குமேல் காயம்!

## பிலிப்பைன்ஸ் நாட்டில் நிகழ்ந்த பரிதாபம்





மணிலா,பெப்.6

பிலிப்பைன்ஸ் நாட்டில் தொலைக்காட்சி விளையாட்டு நிகழ்வொன்றில் கலந்துகொள்ளச் சென்ற மக்களுக்கிடையில் ஏற்பட்ட நெரிசல் காரணமாக 88 பேருக்குமேல் இறந்துள்ளார்கள்; 300 பேருக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள்.

இந்தத் தொலைக்காட்சி நிகழ்வில் நடைபெறும் போட்டிகளில் வெற்றிபெறுபவர்களுக்கு பெருந்தொகைப் பணம் பரிசாக வழங்கப்படுவதுண்டு. சுலபமாகப் பணக்காரர் ஆகிவிடும் நோக்கில் பிலிப்பைன்ஸில் உள்ள வறுமையில் வாடும் மக்கள் ஆர்வத்தோடு கலந்துகொள்வது வழக்கம். வழமையாக 5 ஆயிரம் பேர் மட்டுமே கலந்துகொள்ளும் இந்த நிகழ்வில் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் முண்டியடித்துக்கொண்டு பங்குபற்ற முயன்றிருக்கிறார்கள்.

விளையாட்டு மைதானமொன்றில் இடம்பெற்ற இவ்விழாவின்போது இறந்தவர்களின் சடலங்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

"இலகுவாகப் பணத்தை வெல்லலாம் என்று வந்தோம். கடைசியில் மனைவியை இழந்ததுதான் மிச்சம்" என்று தன் மனைவியை இழந்த ஒரு ஏழை மனிதர் புலம்பிக் கொண்டிருந்தார்.

பிலிப்பைன்ஸில் டி.வி. விளையாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்க வந்தவர்களிடையே நெரிசல் ஏற்பட்டது. இந்த நெரிசலில் சிக்கி 88 பேர் இறந்தனர்; 300 பேருக்கு மேல் காயமடைந்தனர்.

நிகழ்ச்சி [illegible] அல்ட்ரா சாவியா அரங்கில் மக்கள் [illegible]த் தொடங்கி கூட்டம் அதிகரித்ததால் அரங்கின் ஒரு கதவு மட்டும் திறக்கப்பட்டு மற்றவை மூடப்பட்டன.

இதனால், அரங்குக்கு வெளியே இருந்தவர்கள் ஆர்வமிகுதியால் முந்திச் செல்ல முயன்றனர். இதையடுத்து நெரிசல் ஏற்பட்டது. இச்சம்பவத்தின் போது அரங்கத்துக்கு உள்ளேயும் வெளியேயும் 1,00,000 பேர் இருந்தனர் என்று கூறப்படுகின்றது.(ப)

### தி.மு.க. கூட்டணியில் பிளவு ஏற்படுத்த முயற்சி: செய்தியாளர்களிடம் ராமதாஸ்

சட்டப்பேரவைத் தேர்தல் தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சுகளை தி.மு.க. தலைவர் கருணாநிதி உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது விடயமாக, டாக்டர் ராமதாஸ் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்தாவது:-

ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் பிளவை ஏற்படுத்த முதல்வரும், உள[illegible]க்துறையினரும் தொடர்ந்து முயற்சிக்கிற[illegible]. ஆனால் அது வெற்றிபெறாது.

குழப்பங்களுக்கு கூட்டணிக் கட்சியினர் இடம் கொடுக்கக் கூடாது என்ற கருணாநிதியின் கருத்தை நான் ஏற்கிறேன். அதே நேரத்தில் கூட்டணித் தலைவர் என்ற முறையில் தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுகளை கருணாநிதி விரைவில் தொடக்க வேண்டும். அந்தப் பேச்சுகளை கருணாநிதி வெற்றிகரமாக முடிப்பார் என்ற நம்பிக்கை உள்ளது - என்று கூறினார்.

# இஸ்ரேல் ஏவுகணைத் தாக்கு: 3 பலஸ்தீனர்கள் உயிரிழப்பு!

## சனி இரவு காஸாவில் சம்பவம்

காஸா,பெப்.6

பலஸ்தீன காஸா நகரில் இஸ்ரேலிய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் சிக்கி மூவர் பலியாகியுள்ளனர். 5 பேர் காயமடைந்தனர். அல்-அக்ஷா தியாகிகள் படையால் பயன்படுத்தப்பட்டுவந்த கட்டடம் ஒன்றே இஸ்ரேலிய ஹெலியில் இருந்து கடந்த சனி இரவு குறிவைத்துத் தாக்கப்பட்டுள்ளது.

கட்டடத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டவேளை அருகில் நின்றிருந்த கார் ஒன்றில் ஏறி தப்பி ஓட முற்பட்ட மூவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர் என்று இஸ்ரேல் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளி அன்று இஸ்ரேலியப் பகுதி ஒன்றில் பலஸ்தீன ஆயுததாரிகள் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் மூன்று இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டிருந்தனர். அதற்குப் பதிலடியாகவே இஸ்ரேல் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக கருத்துத் தெரிவித்த இஸ்ரேல் இராணுவத்தினர் எமது பகுதிகளில் பலஸ்தீனர்கள் மேற்கொள்ளும் ஏவுகணைத் தாக்குதல்களை நிறுத்தும் முகமாகவே இந்தத் தாக்குதல் சம்பவம் ஒழுங்குபடுத்தப்பட்டது என்றனர்.

தாக்குதலிற்கு இலக்கான கட்டடத்தில் இருந்துதான் இஸ்ரேல் பிரதேசங்கள் மீது தாக்குதல் சம்பவங்கள் ஒழுங்குபடுத்தப்படுவதாக இஸ்ரேல் இராணுவத்தினர் தெரிவித்தனர். எனினும், இதை மறுத்த பலஸ்தீனிய அதிகாரிகள், அல் அக்ஷா அமைப்பின் மெய்வன்மைப் பிரிவு குறித்த கட்டடத்தில் இயங்கியதாகவும் அந்த அமைப்பின் விளையாட்டு [illegible]ிர்சிகள் இடம்பெறும் முகாமாகத்தான் அது செயற்பட்டதாகவும் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் நால்வர் சுங்கத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் ஒன்றின் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த வைத்தியசாலையை அல் அக்ஷா படைப் பிரிவின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சூழ்ந்து கொண்டுள்ளனர். அவர்களில் சிலர் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் தாக்குதலிற்குள்ளான கட்டடம் பாதாக் கட்சிக்குச் சொந்தமானது எனவும் அங்கு தேர்தலில் தோல்வி அடைந்த பலஸ்தீனிய தலைவர் மஹ்மூத் அபாஸ் இன் நடவடிக்கைகள் இடம் பெற்று வந்ததாகவும் கூறினார்.

# தைரியமிருந்தால் அ.தி.மு.க. - தி.மு.க. தனித்துப் போட்டியிடட்டும்

## விஜயகாந்த் சவால்



கரூர்,பெப்.6

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க, அ.தி.மு.க. கட்சிகள் தைரியமிருந்தால் தனித்துப் போட்டியிடட்டும். இவ்வாறு தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவர் விஜயகாந்த் தெரிவித்தார்.

கரூர் மாவட்டம் குளித்தலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற பிரசார நடவடிக்கையின்போது அவர் இவ்வாறு கூறினார்.

தமிழகத்தை ஆண்ட கட்சிகள் ஒரு கட்சியிலிருந்து பிரிந்து வந்தவை. ஆனால், தேசிய முற்போக்கு திராவிட கழகம் தனித்து உதயமான கட்சி.

மக்கள் பிரச்சினைகளைப் பற்றிப்பேசாத தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகள் தொகுதி பங்கீடு பற்றிப் பே[illegible]ருகின்றன. இக்கட்சிகள் யாவருடனும் கூட்டணி அமைக்காமல் தேர்தலில் போட்டியிட்டால் அவற்றின் உண்மையான நிலை தெரியும். தைரியம் இருந்தால் தனியாகப் போட்டியிடட்டும். தமது கட்சியே உயர்ந்தது. தமக்கே முதல்வர் பதவி என இரு கட்சியினருமே கூறிவருகின்றனர். அதை மக்கள் முடிவு செய்வார்கள்.

ஒரு கட்சி 30 தொகுதிகளைக் கேட்கிறது. அத்தனை தொகுதிகளில் வெற்றிபெறமுடியும் என நம்பினால் தனித்துப் போட்டியிட வேண்டியதுதானே. இன்றுவரை தே.மு.தி.க. யாருடனும் கூட்டணி சேரவில்லை. தேர்தலைத் தனியாகவே சந்திப்போம்.

ஆண்டுக்கு ஒரு சதவீதம் வறுமையைக் குறைத்திருந்தால், இதுவரை 20 சதவீத வறுமையை ஒழித்திருக்கமுடியும். ஆனால், இவர்கள் ஊழலை வளர்த்து பணம் சம்பாதித்துள்ளனர். கிராமங்களில் வறுமை உள்ளது. அதனால் மக்கள் நகரங்களுக்கு இடம்பெயர்கின்றனர். அத்துடன், இவர்கள் தேர்தல் நேரத்தில் கவர்ச்சிகரமான திட்டங்களை அறிவிக்கின்றனர். கடந்த நான்கு ஆண்டுகளாக என்ன செய்தார்கள்?

அ.தி.மு.க., தி.மு.க. கட்சிகளுக்கு மாற்றாக தே.மு.தி.க. ஆட்சிக்கு வந்தால் 25 சதவீத ஊழலை ஒழிக்க முடியும். ஊழலால் நாடு சீரழியும் எனத் தெரிந்திருந்தால் ஆங்கிலேயரிடம் போராடி சுதந்திரம் வாங்கியிருக்கமாட்டார்கள் தியாகிகள். ஊழலில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. காங்கிரஸ் கட்சிக்குள்ளே தற்போது பல சண்டைகள். காங்கிரஸ் வழிவந்தோம் என்ற எண்ணம் அவர்களுக்குக் கிடையாது.

[illegible]ற்று, தனியாகப் போராடி வருகிறேன். ஆனால், பலர் என்னை மிரட்டுகின்றனர். எனக்கு சோதிட, தெய்வ நம்பிக்கை உண்டு. ஆனால், அது கிடையாது எனக் கூறும் பலரும் சோதிடர்களை உடன் வைத்துக்கொண்டு நல்ல நேரத்தில் மனுத்தாக்கல் செய்கின்றனர்.

எம்.ஜி.ஆர். பெயரில் தொடங்கிய காது கேளாதோர் பள்ளிக்கு அக்கட்சியினர் இதுவரை நிதியுதவி அளித்துள்ளனரா? நான் ஆண்டுக்கு ரூ.50 ஆயிரம் அளித்து வருகிறேன். இந்தத் தேர்தலில் தே.மு.தி.கவுக்கு வாக்களியுங்கள் - என்றார். (எ)



அ.தி.மு.கவின் பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் சென்னையில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மற்றும் அமைச்சர்கள் மேடையில் குழுமிநிற்பதையும், கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுக்குழு உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.

### மார்ச் முதல் வாரத்தில் தமிழகத் தேர்தல் திகதி அறிவிப்பு?

சென்னை,பெப்.6

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலை எப்போது நடத்துவது பற்றிய அறிவிப்பு மார்ச் மாதம் முதல் வாரத்தில் வெளியாகலாம் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆரூடம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

தமிழகப் பொதுத்தேர்தல் பற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பினைத் தலைமைத் தேர்தல் ஆணையம் வெளியிடுவதற்கு இன்னும் ஒருமாத காலம் ஆகும் என்று செவி வழிச் செய்திகள் தெரிவிக்கின்றன - என்றார் கருணாநிதி. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் 10ஆவது ஆண்டு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்றுக்காலை யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிறுவன இயக்குநர் கே.விக்னேஷ் உரையாற்றுவதையும் மற்றும் நிலைய முகாமையாளர்கள், விரிவுரையாளர்கள் இதில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதி மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஆதி)

# ஐ.ஐ.எஸ். நிறுவன ஆண்டு விழா நேற்றுச் சிறப்புற நடைபெற்றது

யாழ்ப்பாணம்,பெப்.6

ஐ.ஐ.எஸ். கணனி நிறுவனத்தின் 10ஆவது ஆண்டு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்றுக்காலை யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் ஜூபிலி மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றன.

நிகழ்வில் மங்கள விளக்கினை ஐ.ஐ.எஸ். குறூப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் இயக்குநருமாகிய கே.விக்னேஷ் மற்றும் பயிற்சி இயக்குநர் எஸ்.பிரபாகரன், நிலைய முகாமையாளர் பி.எல்.ஐ.அன்ரன் கிறிஸ்ரின் -

ஐ.ஐ.எஸ். சிற்றி கம்பஸ் நிறுவனத்தின் நிலைய முகாமையாளர் எம்.குமாரவேல்ராஜா, ஐ.பி.எம்.எஸ். நிறுவனத்தின் இயக்குநர் திருமதி ஜெயசோதி விக்னேஷ், பிரிவுத் தலைவர் கே.மாறன், கே.சசிகுமார், செல்வி ஜபா நிரோசினி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில் உரைகளை நிறுவன இயக்குநர் விக்னேஷ், பயிற்சி இயக்குநர் எஸ்.பிரபாகரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

கடந்த கல்வியாண்டில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சிறப்பு விருதுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கணனி நிறுவனங்களின் இயக்குநர்கள், உத்தியோகத்தர்கள், அரச, தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள்,பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ-7-14)

# தென்மராட்சியில் மின்சாரம் கிடைக்காத இடங்களுக்கு வருட இறுதிக்குள் மின்னிணைப்பு

தென்மராட்சி,பெப்.6

தென்மராட்சிப் பிரதேசத்தில் இதுவரை மின்சார வசதி கிடைக்காத கிராமங்களுக்கு இவ்வருடம் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் மேற்கொண்டு வருகிறார்.

அடுத்த இரு வாரங்களில் சரசாலைப் பகுதிக்கான மின்சாரம் வழங்கப்படுமெனவும் அடுத்த கட்டமாக கச்சாய் பகுதிக்கும் அதனையடுத்து விடத்தற்பளை பகுதிக்கும் மின்சாரம் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் -

இதேவேளை- நாவற்குழி 300 வீட்டுத் திட்டப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான நிதியினைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் தெரிவித்தார். (எ-117)

# முகாமைத்துவ சேவைகளை வழங்குவது குறித்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையில் போட்டி

தென்மராட்சி,பெப்.6

உள்ளூராட்சி நடவடிக்கைகளை மேம்படுத்தும் விடயத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே முகாமைத்துவ சேவைகளை வழங்குவது தொடர்பான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் அனுசரணையுடன் மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் இந்தப் போட்டிகளை நடத்தவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களிலும் அந்த மாவட்டங்களில் அமைந்துள்ள பிரதேச சபைகளுக்கிடையிலான போட்டியை மாவட்ட ரீதியாக நடந்தி பின்னர் அங்கு தெரிவு செய்யப்படும் பிரதேச சபைகளுக்கிடையிலான ஒரு போட்டி மாகாண ரீதியில் நடத்தப்படவுள்ளது.

மாநகரசபை, நகர சபைகளுக்கிடையிலான போட்டிகள் மாகாண மட்டத்தில் தனித்தனியாக நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டி சம்பந்தமாக மாகாண சபையினால் பெறுமதிமிக்க விருதுகள் வழங்கப்படுவதுடன், தேசிய மட்டப் போட்டியில் வெற்றிபெறும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மத்திய உள்ளூராட்சி அமைச்சினால் விருதுகளும் வழங்கப்படும். மேலும் அவ்வாறு வெற்றிபெறும் சபைகளின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியானது 2004ஆம் ஆண்டுக்குரிய முகாமைத்துவ மதிப்பீட்டுப் போட்டியாகும்.

பிரதேச சபைகளுக்கிடையிலான மாவட்ட மட்டப் போட்டிகள் பெப்ரவரி ஏழாம் திகதி தொடக்கம் 21ஆம் திகதிவரை நடத்தப்பட்டு தெரிவுசெய்யப்படும். உள்ளூராட்சி சபைகள் மாகாண மட்டப் போட்டிக்கு அனுப்பப்படும்.

பிரதேச சபைகள், நகரசபைகள், மாநகர சபை ஆகியவற்றுக்கிடையிலான மாகாண மட்டப்போட்டிகள் நடத்தப்படும் திகதிகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்று மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் க.சபாபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். (எ-117)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா மயில்வாகனம்



நாயன்மார்கட்டைச் சேர்ந்த கந்தையா மயில்வாகனம் அவர்கள் 04.02.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் ருக்மணியின் அன்புக் கணவரும் சிவரூபன் (சுவிஸ்), கலைச்செல்வி (சுவிஸ்), சுரேஷ்குமார் (சுவிஸ்), ரெனிச்செல்வி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்குணவதி (சுவிஸ்), சூசை (சுவிஸ்), சுசீலா (சுவிஸ்), குலசங்கர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சதாசிவம் (இ.மி.ச.), குணம், புஸ்பராணி (சுவிஸ்), வசந்தகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வராணி, ராஜேஸ்வரி, ராகுலன் (சுவிஸ்), காந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபர்ணா, ரொமினா, ஆர்த்திகா, கபிலன், ரெக்சினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

33, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு.
(46475) (24-11-45)

**ருக்மணி** (மனைவி),
**பிள்ளைகள்.**

### பொன்னர் சிதம்பரப்பிள்ளை

(சாவகச்சேரி, மீசாலை)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட பொன்னர் சிதம்பரப்பிள்ளை அவர்கள் (04.02.2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் திருச்செல்வம், அருட்செல்வம்,மனோரஞ்சிதம், புஸ்பராணி (ஆசிரியை, யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்,தெல்லிப்பழை), செல்வராணி (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), நிர்மலாதேவி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் வலயக் கல்வி அலுவலகம் தென்மராட்சி, சாவகச்சேரி) ஆகியோரின் தகப்பனும் ஜெயராசா, ஆனந்தராசா, ஜெகதீசன், செல்வமலர், பாஸ்கரன் ஆகியோரின் மாமனாரும் கௌசல்யா, நிரோன், நிச்சன், ரோசி, சுஜீவன், மாயவரன், சிந்துஜன், யானுஷன், ஜெனனிதா, கஜீபன், லக்ஷன், யாமினி, பானுஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் பொன்னர் - செல்லாச்சி தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்ற கந்தையா, செல்லத்துரை, வயிரமுத்து (மலேசியா), இராசமணி ஆகியோரின் அண்ணனும் சின்னட்டி சரவணமுத்து, பரமு மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் சின்னட்டி - நாகம்மா தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு,
அம்மன் கோவில் வீதி,
மீசாலை.
T.T.: 0777495965, 0777 492539

தகவல்:
**அருட்செல்வம்**
(மகன்).
(46723) (24-11-45)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் கார்த்திகேசு கேசவன்

பிறப்பு 12-04-1947 — மறைவு 18-01-2005

திதி: 06-02-2006

பார்போற்ற இவ்வுலகில் வாழ்ந்தீர்கள்
ஆண்டு ஒன்று போனாலும் - ஆயிரம்
நினைவுகளுடன் நாம்
காலன் அவன் பாதியிலே - உங்கள்
வாழ்வை முடித்துவிட்டான் - அப்பா
நீங்கள் காணவேண்டிய பலதை
காணாமல் சென்றீரோ! - அப்பா
நீங்கள் பெற்ற செல்வங்கள் ஐந்தினையும்
எங்கள் அம்மாவையும் மறந்தீரோ!
நாள்கள் கடந்தாலும் எம் மனக்கவலை
ஆறவில்லை! என்றும் உங்கள் ஆத்மா
சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

[illegible] மல்லாகம். — **குடும்பத்தினர்.**

(46469) (24-11-45)


## ஆள்தேவை

ஓட்டுமடத்தில் இயங்கும் ஆரம்ப ரியூட்டரிக்கு அதனை நிர்வகிக்கக்கூடியவர் தேவை. ரியூசன் கொடுக்கத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மாலை 4 மணி - 6 மணிவரை சந்திக்கலாம். உங்களது கடமை நேரம் பிற்பகல் 2 மணி - 6மணி வரை. (கிழமை நாள்களில்)
சனி,ஞாயிறு (முழுநேரம், விரும்பினால்)
தொடர்பு: **சி.சிவசக்தி** (ஆசிரியை) (B.A.Cey.)
**638, மானிப்பாய் வீதி,ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**
(46477) (19-11-45-24)


## அமரத்துவ 50ஆவது ஆண்டு நினைவுநாள்



தோற்றம் 07 - 07 - 1916 — மறைவு 06 - 02 - 1956

நயினாதீவு அமரர் **வேலாயுதர் சங்கரப்பிள்ளை பொன்னம்பலம்**

அவர்கள் தாங்கள் மறைந்து 50 ஆண்டுகளாகினாலும் எம் வழமான வாழ்வுக்கு தோன்றாத் துணையாக இருந்து வரும் தங்கள் நினைவுடனேயே என்றும் இருந்து வருகின்றோம்.

ஓம் சாந்தி!

திருமதி சௌபாக்கியவதி நமசிவாயம் குடும்பத்தினர்,
திரு. திருமதி யோகேஸ்வரி-மகேந்திரன் குடும்பத்தினர்,
திரு. திருமதி கமலேஸ்வரி - துரைநாயகம் (லண்டன்)குடும்பத்தினர்,
திரு. திருமதி தில்லைநாதன் குடும்பத்தினர் நயினாதீவு.-3
(செயலாளர் பிரதேச சபை, நெடுந்தீவு.)
திரு. திருமதி பத்மநாதன் (ஏ.ஜ.) கனகேஸ்வரி குடும்பத்தினர்
(46477)(26-11-45-24) நயினாதீவு-3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவுப்பிரியர்களுக்கு ஓர் இனிய செய்தி

06-02-2006 முதல் 12.02.2006 வரை

கொசி நிறுவனத்தின் 3ஆவது ஆண்டுநிறைவையொட்டி உணவகவாடிக்கையாளர்களுக்கு 20 % சிறப்புக் கழிவு இன்று முதல் ஒரு வாரத்திற்கு. வாடிக்கையாளர்கள் அனைவரையும் கொசியின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் இணையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

● அனைத்து விதமான கடன் அட்டைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொசிக்கு ஆதரவு வழங்கிய அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நன்றிகள்

இல. 15, மணியம்ஸ் பில்டிங், (46486)(18-34-49)
சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.



## தரம் 4 - மாணவர்களின்

எமது கல்வி நிலையத்தில் கபிலன் ஆசிரியரின் விசேட வழிகாட்டல் வகுப்புகளும், விசேட பரீட்சைகளும் இடம் பெறுகின்றது. பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்களும், வினாத்தாள் தேவைப்படும் நிறுவனங்களும் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

தரம் - 4 விசேட வகுப்புகள் - கபிலன் ஆசிரியர்
ஞானக்குழந்தை கல்விக் கழகம்,
இல.19, சிவன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி-47648) (18-34-49)


## கண்ணீர் அஞ்சலி

### வீரசிங்கம் பவசிங்



எமது நிலையத்தின் முன்னாள் தலைவரும், கொக்குவில் இந்துக் கல்லூரி, K.C.C.C. வி.கழகம், லங்கா சிமெந்து லிமிட்டட் ஆகியவற்றின் முன்னாள் கிரிக்கெட், உதைபந்தாட்டவீரரும் கொக்குவில் இந்துக் கல்லூரி, K.C.C.C. வி.கழகம் ஆகியவற்றின் முன்னாள் விளையாட்டுத் துறைப் பயிற்றுவிப்பாளருமாகிய வி. பவசிங் அவர்களின் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அவரது இழப்பு எமது வி.கழகத்துக்கு பேரிழப்பாகும். அன்னாரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் மத்திய சனசமூக
நிலையமும் விளையாட்டுக் கழகமும்.
(46489)
(18-49-34)

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

### சபாபதி திருநாவுக்கரசு



தோற்றம் 11-07-1937 மறைவு 23-01-2006

கடந்த 23.01.2006 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் சபாபதி திருநாவுக்கரசு அவர்களின் மறைவின் போது ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தும், ஆறுதல் கூறியும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (06.02.2006) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செட்டி குறிச்சி,
பண்டத்தரிப்பு.
(சி-47724)(18-34-49)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் பவசிங்



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் பவசிங் அவர்கள் நேற்று (05.02.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் றெஜினாவின் (காவேரி) அன்புத் தந்தையும் சசிக்குமாரின் மாமனும் புவனேசன் (கொழும்பு மத்திய வங்கி), சிறினிவாசன், வள்ளி நாயகி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் றோகினி, சந்திரலிங்கம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்), யசோதரா (ஆசிரியை, யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), பாலகிருஷ்ணன் தேவாம்பிகை(ஜேர்மனி), வாசுதேவன் யோகாம்பிகை (கனடா), நிமலன் கனகாம்பிகை (லண்டன்), யோகராசா ஞானாம்பிகை (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் தட்சாயினியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2006) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் சிங்கரன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்., (46488)(18-34-49)

தகவல்:
ப.கமலாம்பிகை
(மனைவி).

## தென்மராட்சியில் அறுவடை ஆரம்பம்

கலாபோக நெல் அறுவடையை தென்மராட்சி விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர். மட்டுவில், மீசாலை, தனங்கிளப்பு, கைதடி, வரணி ஆகிய பகுதிகளில் உள்ள வயல்களில் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் விளைச்சல் எதிர்பார்த்தளவில் இல்லையென விவசாயிகள் கவலை தெரிவித்தனர். விதைப்புக் காலத்தில் பெய்த மழையால் பெருமளவு பயிர் அழிந்து விட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். (ஓ-31)

## கணனி நிலைய கட்டடத் திறப்புவிழா

மன்னார் மாவட்டப் பொருண்மிய மதியுரையகத்தின் அனுசரணையுடன் கடந்த 25ஆம் திகதி வெள்ளாங்குளப் பிரதேசத்தில் கணனி நிலையக் கட்டடத்திறப்பு விழா இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள வெள்ளாங்குளப் பிரதேச மக்கள் கணனிக் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றனர்.

இப்பிரதேசத்தில் உள்ளவர்கள் கணனி அறிவில் ஓரளவேனும் முன்னேற்றத்தைக் கண்டு எதிர்காலத்தில் வளர்ந்துவரும் சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழ்வதற்கேற்ற வகையில் கணனிக் கல்வியினைக் கற்றுக் கொள்ளும் நோக்குடனே இந்த நிலையம் அமைக்கப்பட்டது. இந்த நிலையத்தினை அமைப்பதற்கு ஐ.எல்.ஓ. நிறுவனத்தினர் 6 லட்சத்து 59 ஆயிரம் ரூபா நிதியை வழங்கினர். (த-352)

## உணவகங்களில் பணியாற்றுவோருக்கு

சாவகச்சேரிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட உணவகங்களில் பணியாற்றுபவர்கள் எந்தவிதமான நோயையும் காவுகொள்ளாத நிலையில் உள்ளனர் என்று வைத்திய அதிகாரியிடம் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான அறிவுறுத்தல் கடிதம் சாவகச்சேரிப் பிரதேச சபைக்குட்பட்ட வரணி, கொடிகாமம், மிருசுவில், கைதடி, சரசாலை, நாவற்குழி உப பிரதேச அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதிகளில் நடத்தப்படுகின்ற உணவகங்களுக்குப் பிரதேச சபையால் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த சுகாதார நடவடிக்கையைப் பின்பற்றி சகல உணவக உரிமையாளர்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சாவகச்சேரிப் பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் கேட்டுள்ளார்.

இந்த நடைமுறை தொடர்பாகச் சுகாதாரப் பரிசோதகர்கள் கண்காணிப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-31)

## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினம் இராசலக்சுமி

(அச்சம்மா)

மூல்லாத்தனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொக்குவில் கிழக்கைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் இராசலக்சுமி அவர்கள் நேற்று (05.02.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணேசலிங்கம், கதிர்காமநாதன் மற்றும் விஜயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (சி-47728)

தகவல்:
இ.ஜெயபாலன்
(மருமகன்).


நாதன்ஸ் யாழ்ப்பாணம்
பொங்கல் வெளியீடு
அல்டிமேட் அஜித், லைலா மற்றும் பலர் நடித்த
பரமசிவன்
காட்சி நேரம்: 10.30, 2.30





ராஜா யாழ்ப்பாணம்
சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
சரவணா
இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்:
பு.நே. 10.30, 2.15 மட்டும்





நாகம்ஸ் சுன்னாகம்
சூர்யா, திரிஷா, வடிவேல் நடித்த
ஆறு
தினசரி: ... 3.00




## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் இராமுப்பிள்ளை

(பாக்கியம், பெரியவிளான்)

திருமதி சிவபாக்கியம் இராமுப்பிள்ளை அவர்கள் நேற்று (05.02.2006)ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளையின் அன்பு மனைவியும் அமரர் கணேசு, அமரர் சுந்தரலிங்கம், செல்வராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை), ராஜகோபால் (கனடா), அமரர் சிவராசா ஆகியோரின் பாசமிகு தாயும் சகுந்தலா, ஞானசௌந்தரி (ஆசிரியர், அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை), கற்பகநிதி (கனடா), ஜெயகௌரி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2006)திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அழகொல்லை,
அளவெட்டி வடக்கு. (சி-47726) (18-34-49)

தகவல்:
செல்வராசா (மகன்).

### முருகையா சிவக்கொழுந்து

காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியரும் இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவருமான (விஷகடி வைத்தியருமான) அப்பாக்குட்டி முருகையாவின் மனைவி சிவக்கொழுந்து நேற்று(05.02.2006)ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.02.2006)திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணிக்கு தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் கிழக்கு,இணுவில்.
(திகழ்கல்வி நிலையம்)

தகவல்:
சின்னராசா (மகன்).

### வாகீஸ்வரி கனகரத்தினம்(பாமா)

தெல்லிப்பழை, தையிட்டிப்புலத்தை பிறப்பிடமாகவும் புத்தூர் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வாகீஸ்வரி கனகரத்தினம் 04.02.2006 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல ஆயுள்வேத வைத்தியர் கனகரத்தினம் - சீனிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புச் சகோதரியும் தாமோதரம்பிள்ளையின் மைத்துனியும் சிறிதரன் (முகாமைத்துவ உதவியாளர் , யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்), கணேசன் ஆகியோரின் சிறியதாயும் பவானி (ஆசிரியை, சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம்), தயாளினி (தேசிய சேமிப்பு வங்கி, திருநெல்வேலி) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(05.02.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் புத்தூர் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(46486)
(18-34-49)

தகவல்:
தா.சிறிதரன்,
தா.கணேசன்(பெறாமக்கள்).

### சரவணை வேலுப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர், நக்குவானை)

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை வேலுப்பிள்ளை அவர்கள் நேற்று(05.02.2006)ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் (அருமை) கணவரும் பத்மாவதி, பத்மநாதன், மகேந்திரநாதன், றுக்மணிதேவி (மணி), பாலநாதன்(பபா), மனோறஞ்சிதமலர் (மலர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் சாள்ஸ், ராஜேஸ்பதி (இராசாத்தி), அல்வின், ஞானச்சந்திரன், நேசமலர், செல்வராசா ஆகியோரின் மாமனும் றெஜீனாசிவபாலன், மேரிரவீந்திரன், பத்மலோஜினி நிர்மலராஜ், மதன்ராஜ், டக்சன், சுதர்சன், நிகிலா, சகிலா, வினோதினி, நேபா, வினோகரன், வினோத், மதிபா, கஜேந்திரன்,வாசுகி, நிமலேந்திரன், பிரதீபன், சுரேஷ்குமார், துஷ்யந்தன், வான்மதி, சுபா, தாசன், சுதன், லெனின், அபி, ராஜா, நீகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(06.02.2006)திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நல்லடக்க ஆராதனை பத்மநாதன் இல்லத்தில் நடைபெற்று, நவாலி கொத்துக்கட்டி தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொத்துக்கட்டி றோட்,
நவாலி தெற்கு, மானிப்பாய். (46480) (18-34-49)

தகவல்:
வே.பத்மநாதன்
(மகன்).

### நாகலிங்கம் சண்முகநாதன்



(முன்னாள் சாரதி, இ.போ.ச.)

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சண்முகநாதன் 02.02.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நாகலிங்கம் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா - அருளம்மா தம்பதியரின் மருமகனும் தங்கரத்தினத்தின் அன்புச் சகோதரரும் சத்தியதேவியின் அன்புக் கணவரும் வாமதேவன் (ஜேர்மனி), நந்தகுமார் (யாழ்.போதனா வைத்தியசாலை), ரேணுகா(ஹொலண்ட்), சுபாசினி(ஜேர்மனி), சுதர்சினி(ஜேர்மனி), தயானந்தி(ஜேர்மனி), அமுதரஞ்சினி(H.N.D.A, முதலாம் வருட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌந்தினி (ஜேர்மனி), பத்மராணி(கொட்டடி, யாழ்ப்பாணம்), சதாகரன்(ஹொலண்ட்), சிவபாதசுந்தரம்(ஜேர்மனி), மகிழ்ராஜ்(ஜேர்மனி), சூரியமூர்த்தி (ஜேர்மனி)ஆகியோரின் மாமனும் விஜினன், தசாகன், சுஜின், ரம்யா, சாருஜன்,சாரா, சகானா, சுஜானி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(07.02.2006)செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் நீர்வேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசாமி கோயிலடி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (46479) (18-34-49)

தகவல்:
ச.நந்தகுமார்
(பிள்ளை- மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ்.பி.திஸநாயக்கவுக்கு அடுத்த மாதம் விடுதலை

கொழும்பு,பெப்.06

நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பில் சிறைத்தண்டனையை அனுபவித்துவரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க அடுத்த மாதம் 27ஆம் நாள் விடுதலையாகவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.- என இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

நன்நடத்தையின் அடிப்படையில் இவரது தண்டனைக்காலம் குறைக்கப்பட்டு அடுத்த மாதம் 27ஆம் நாள் விடுதலை செய்யப்படவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை அவரை விடுவிக்குமாறு கோரி கடந்த 2ஆம் திகதி முதல் ஐ.தே. கட்சியினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தில் ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரல்

ஏறாவூர்,பெப்.6

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தகுதியானவர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

புதிய நியமனங்களில் 60 சதவீதமானவை திறந்த போட்டிப் பரீட்சை அடிப்படையிலும், 40 சதவீதமானவை ஏற்கனவே அரச சேவைகளில் உள்ளவர்களுக்காக நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை அடிப்படையிலும் வழங்கப்படவுள்ளன.

திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிப்பவர்கள் பட்டதாரிகளாக இருப்பதுடன், கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிப்பவர்கள் அரச சேவையில் 10 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பதுடன் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் மொழி, கணிதம், ஆங்கிலம் ஆகிய மூன்று பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மேற்குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பான மேலதிக விவரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வெளியான 14:31ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. (க)



லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள டென்மார்க் தூதரகம் நேற்று ஆர்ப்பாட்டக் காரர்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

டென் மார்க்கில் பத்திரிகை ஒன்று இஸ்லாமியர்களின் இறைவனான அல்லாவை கேலிச்சித்திரமாகப் பிரசுரித்ததைக் கண்டித்து இஸ்லாமிய நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுவருகின்றமை தெரிந்ததே.

# மருத்துவமனையில் டாக்டர் ராமதாஸ்

தமிழகத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் உடல் நலக்குறைவு காரணமாக நேற்றிரவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் சேலத்தில் ஒரு விழாவில் கலந்துகொண்ட டாக்டர் ராமதாஸ் நேற்றுக்காலை தர்மபுரி வந்தார். அங்கு மாவட்ட பொதுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டார். இரவு பாடசாலை ஒன்றில் இடம் பெற்ற விழாவில் அவர் பங்கேற்றார்.

அப்போது அவருக்கு மயக்கம் ஏற்பட்டது. இதனையடுத்து தர்மபுரியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீரிழிவு வியாதி காரணமாகவே அவருக்கு மயக்கம் ஏற்பட்டதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.(ஒ-12)

## கிண்ணியாவில் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,பெப்.6

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் கடலூர்,பைசல் நகர் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமக்கு இதுவரை முழுமையாக நிரந்தர வீடுகள் அமைத்துத் தரப்படவில்லை என்பதை ஆட்சேபித்து அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் முகமாக ஆர்ப்பாட்டம் ஒன்றினை இன்று திங்கட்கிழமை நடத்தவுள்ளனர். (ஒ-12)

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகங்களில் இந்தக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் இந்த மாதம் 15ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை கட்டுப்பணத்தைச் செலுத்தலாம் என்று தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது. (க)

## அட்மிரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட நிலையில் கடற்படை பாதுகாப்புப் பெட்டகத்தில், வைக்கப்பட்டிருப்பது வழமை. அந்நிலையிலேயே அவை அகற்றப்பட்டு அவ்வப்போது குறிப்பிட்ட மாற்றங்கள் செய்யப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக வாராந்த ஆங்கில பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முப்படைத் தளபதிகளின் சொத்துகள் தொடர்பாக அவர்கள் வழங்கும் பிரகடனத்தின் ஒரு பிரதி பாதுகாப்பு அமைச்சிலும் இருக்கக் கூடும் என்பதால் அட்மிரல் தயா சந்தகிரியின் ஆவணங்கள் தொடர்பாக அந்த தஸ்தாவேஜுக்களையும், கடற்படை தலைமையகத்தில் மாற்றங்களுக்குள்ளானவை எனக் கருதப்படும் ஆவணங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. (க)

## பெப்ரவரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது சுற்றுப் பிரயாணத்தை ஆரம்பிக்கும் வழியில் இன்று லண்டனில் பகல் தங்குகின்றார். அந்நேரம் அவர் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து பேசுவாரென ஒரு தகவல் தெரிவித்தது.

இச்சந்திப்புகளை அடுத்து பெரும்பாலும் இன்றிரவுக்குப் பின்னர் - ஜெனீவாப் பேச்சு உடனடியாக நடைபெறுமா என்பது குறித்தும், பெரும்பாலும் பெப்ரவரி மூன்றாம் வாரத்தில் அது நடக்கும் என்று பல தரப்பில் எதிர்பார்க்கப்படுவது செயலுருப்பெறுமா என்பது குறித்தும் தீர்க்கமான - திட்டவட்டமான - பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

## தொகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், குறிப்பிட்ட சில உள்ளூராட்சி அமைப்புகளில் - சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றிபெறும் பட்சத்தில் - அந்தச் சபைகளின் தலைமைப் பொறுப்பு ஜே.வி.பிக்கு வழங்கப்படும் என்று தேர்தலுக்கு முன்னதாக அறிவிக்கப்பட வேண்டும் என்றும் ஜே.வி.பியினர் கேட்டுள்ளனர். இதற்கும் சுதந்திரக் கட்சியிடமிருந்து திருப்தியான பதிலைப் பெற ஜே.வி.பியினரால் முடியவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த நிலையிலேயே உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட ஜே.வி.பி. தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், பொரும்பாலான உள்ளூராட்சி அமைப்புகளில் அதிகாரத்தைத் தற்போது கையில் வைத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கூட்டமைப்பில் பிளவு ஏற்பட்டால் உள்ளூராட்சித் தேர்தல் பெரும் வெற்றியைப் பெற்று விடும் என்று சுதந்திரக் கட்சியின் சில தலைவர்கள் அஞ்சுகின்றனராம். அவர்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து ஜே.வி.பி. வெளியேறாமலிருக்கப் பகீரதப் பிரயத்தனத்திலும் ஈடுபடுகின்றனராம். (ஒ)

## போர் நிறுத்த உடன்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனியுமோர் அர்த்தமற்ற பேச்சை ஆரம்பத்திலிருந்து நடத்தி, மீண்டும் ஒருமுறை சிங்கள அரசின் கபடத்தனத்தை சர்வதேச சமூகத்திற்கு அம்பலப்படுத்திக் காட்டவேண்டிய கடமையும், அவசியமும் புலிகள் இயக்கத்துக்கு இல்லை.

பேச்சிற்கும் அதன் அரசியல் இலக்கான அரசியல் தீர்வுக்குமான ஓர் அடித்தளம் சிங்கள அரசாலும் - புலிகள் இயக்கத்தாலும் ஏற்கனவே போடப்பட்டுவிட்டது.

போர்நிறுத்த ஒப்பந்தம்தான் அந்த அரசியல் அடித்தளம்

இரு தரப்பாலும் நீண்டநாள்கள் விவாதிக்கப்பட்டு - இருதரப்பாலும் திருத்தங்கள் செய்யப்பட்டு - இறுதியில் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்து, இருதரப்பாலும் கைச்சாத்திடப்பட்ட ஓர் அரசியல் உடன்பாடுதான் அந்தப் போர்நிறுத்த ஒப்பந்தம்.

அதை சரியாகவும், முழுமையாகவும் நடைமுறைப்படுத்துவதன் மூலமே தடைப்பட்டுப் போயுள்ள சமாதான முயற்சியை அரசியல் தீர்வு நோக்கி நகர்த்த முடியும்.

தமிழர் தாயகத்தில் இராணுவ நெருக்குவாரங்கள் அற்ற, இயல்பு நிலை தோற்றுவிக்கப்படவேண்டியது, அரசியல் பேச்சுக்கு அவசியமானது என்பது புலிகளின் உறுதியான நிலைப்பாடாகும்.

நீண்டகாலப் போரால் தமிழரின் அன்றாட வாழ்க்கை சிதைவடைந்துபோயுள்ளது. இந்த அமைதிக்காலத்திலேயே ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தங்களது இருப்பிடங்களுக்குச் செல்லமுடியாது அகதிமுகாம்களில் வாழ்கின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமிழர்களின் வீடுகள், கோயில்கள், பாடசாலைகள், பொதுக்கட்டடங்கள் படையினரால் அபகரிக்கப்பட்டு இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டுள்ளன. தமிழ் மீனவர்களின் மீன்பிடி உரிமை படையினரால் பறிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் பயணங்கள் படையினரால் இடையூறுக்குள்ளாக்கப்படுகின்றன. சுற்றிவளைப்புகள், கைதுகள் என்பன இன்று வரை தொடர்கின்றன.

கடந்த ஒன்றரை மாத காலத்தில் மட்டும் நூற்றி ஐம்பதிற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். அண்ணளவாக அத்தொகையின் அரைவாசி அளவினர் படையினராலும் ஒட்டுக்குழுக்களினாலும் கடத்தப்பட்டு காணாமற் போயுள்ளனர்.

இவ்விதம், தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை இராணுவப் பயங்கரவாதத்தால் சீரழிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய இராணுவ அட்டூழியங்களை இல்லாது செய்து மக்களை இயல்பு வாழ்க்கைக்குள் கொண்டுவரும் வழிமுறைகளைக் கொண்டதாகவே போர்நிறுத்த உடன்பாடு வரையப்பட்டிருந்தது.

ஆனால், அந்த உடன்பாட்டின் பிரகாரம் போர் ஓய்வு என்ற அம்சத்தை மட்டும் தனக்குச் சாதகமாக எடுத்துக்கொண்ட சிங்கள அரசு, நான்கு வருடங்கள் பூர்த்தியடையும் இன்றைய நிலையிலும் கூட அந்தச் சமாதான உடன்பாட்டை சரியாக அமுல்படுத்தவில்லை.

சிங்கள ஆட்சியாளர்களின் விருப்பமின்மையாலும் சிங்களப் படைகளின் ஒப்பந்த மீறல்களாலும் போர்நிறுத்த உடன்பாடு முறிவடையும் சூழல் ஏற்பட்டபோதே மஹிந்த அரசு ஜெனீவா பேச்சுக்கு உடன்பட்டுள்ளது.

ஜெனீவா பேச்சு மேசையில் போர்நிறுத்த உடன்பாட்டை விரைவாகவும், முழுமையாகவும் நடைமுறைப்படுத்துவது பற்றிப் பேசவே புலிகள் இயக்கம் தயாராக உள்ளது.

இந்த உறுதியான நிலைப்பாட்டை சமாதானத் தூதரும், நோர்வே அமைச்சருமான எரிக் சொல்ஹெய்மிடம் தலைவர் பிரபாகரன் வலியுறுத்திக் கூறிவிட்டார்.

போர்நிறுத்த உடன்பாட்டில் திருத்தங்கள் பற்றிப் பேசவோ அல்லது இந்த உடன்பாட்டைப் புறந்தள்ளிவிட்டு அரசியற்தீர்வுகள் பற்றிப் பேசி வீணாகக் காலங்கடத்தவோ புலிகள் இயக்கம் தயாராக இல்லை.

ஜெனீவா பேச்சுக்கென திகதி குறிக்கப்பட்ட பின்னரும் இராணுவத்தினதும், ஒட்டுக்குழுக்களினதும் அட்டூழியங்களை அடக்க மஹிந்த ராஜபக்ஷ அரசு முன்வரவில்லை.

வெளிப்படையாகவே தமிழருக்கெதிரான கடும்போக்கு நிலைப்பாடெடுத்துள்ள மஹிந்த அரசுடன் பேசுவதனால் ஏதேனும் நன்மைகள் உண்டா என்று தமிழ் மக்கள் சந்தேகம் தெரிவித்தபடி உள்ளனர்.

போரைத் தவிர்த்து தமிழர் தாயகத்தில் அமைதிச் சூழல் ஏற்படுத்தப்படவேண்டுமெனில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை சரியாக அமுல்படுத்துவதே ஒரேயொரு வழியாகும். இன்றைய அரசியல் சூழலில் சமாதானப் பேச்சுக்கான திறவுகோல் போர்நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கமே ஆகும்.

இந்தக் கள யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டபடி ஜெனீவாப் பேச்சு மேசைக்கு மஹிந்த அரசு வருவதே பேச்சை தொடரச்செய்யும் நம்பிக்கையை அனைவருக்கும் தரும்.

இதற்கு மஹிந்த அரசு மறுத்து, காலங்கடத்த அது முயன்றால், தலைவர் மாவீரர் நாள் செய்தியில் கூறியபடி, போராட்டத்தைத் தீவிரமாக்கி, தமிழரின் விடுதலை அபிலாசையை வென்றெடுப்பதைத் தவிர புலிகள் இயக்கத்திற்கு மாற்றுவழிகள் ஏதுமில்லாமல் போகும். - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)


**COMBINED MATHS**

G.R.Kumar

**Group Class 2008 A/L**

திங்கள்,புதன்,வெள்ளி, காலை 6.30

ஆரம்பம்: 08.02.2006 Personal Classes

தொடர்புகளுக்கு: 0777252125

206/2, Brown Road, Jaffna.



ஒவ்வொரு மொழியைப் பேசும்போதும் மனிதன் இன் னொரு மனிதனுக்குச் சமனாகின்றான்.

- புகழ்பெற்ற தத்துவாசிரியரின் கூற்று.

**இலவச சிங்கள வகுப்பும் பயிற்சி நெறியும் சான்றிதழும்**

காலம் : 11-02-2006 சனிக்கிழமை

விபரம் : புதன்கிழமை உதயனில்



**CHEMISTRY CENTRE**

Temple Road (Green Park முன்னே)

A/L 2008 புதிய பிரிவு

ஆரம்பம்: 7/2 செவ்வாய் 4-5 p.m.

INORGANIC பிரத்தியேகப்பிரிவு

ஆரம்பம்: 7/2 செவ்வாய் 5-30 p.m.

By: [illegible] B.Sc.


## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் அழகரத்தினம்

(இளைப்பாறிய காணி அபிவிருத்தி இலாகா, களஞ்சியப் பொறுப்பாளர்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் அழகரத்தினம் அவர்கள் நேற்று (05.02.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (06.02.2006) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

203/6, கண்டி வீதி,
சரஸ்வதி லேன்,
அரியாலை.

தகவல்:
அ.இராசம்மா (மனைவி).
(46490)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.